விலை: 30.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 026 வள்ளுவர் ஆண்டு 2053 தை 01 வெள்ளிக்கிழமை (14.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவோம்

### கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

எமது புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து தமிழ் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவோம் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து 23

# கொரோனா அலை ஏற்படும் அபாயம்

## தொற்று நோய் விஞ்ஞான நிறுவகத்தின் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரிக்கை



(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் கொரோனா அலை ஏற்படும் அபாய நிலை உள்ளதாக தேசிய தொற்றுநோய் விஞ்ஞான நிறுவகத்தின் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம எச்சரித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த இரு வாரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது. 23

## "பிரபாகரனே" என்னை வீழ்த்தினார்

### ஐ.தே.க. தலைவர் ரணில் தெரிவிப்பு

(03ஆம் பக்கம் பார்க்க)

## சந்தையில் தேங்காய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் தேங்காயின் விலை 10 முதல் 15 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

விளைச்சல் குறைவடைந்துள்ளமையே விலை அதிகரிப்புக்கான 24

## அரசின் பிழையான தீர்மானங்களே தற்போதைய பொருளாதார நெருக்கடி

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார பிரச்சினையின் உண்மை தன்மையை அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். அதன் மூலம் மக்களின் உதவியுடன் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும். அத்துடன் பொருளாதார நெருக்கடிக்கு கோவிட் தொற்றுடன் அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களுமே காரணமாகும். 23

## "விடுதலை பொங்கல்"



நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று மேற்கொள்ளப்பட்ட விடுதலைப் பொங்கல் நிகழ்வு

(03ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா +594

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான 24

## நயினாதீவு ரஜமஹா விகாரை புனித பூமியாக பிரகடனம்

### பிரதமர் மகிந்த வலியுறுத்து

(கொழும்பு)

இம்முறை அரச வெசாக் விழாவிற்கு முன்னதாக நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 23

## பெப்ரவரி 1 ஆம் திகதி நாடு முடக்கப்படுமா?

(கொழும்பு)

பொதுமக்கள் தொடர்ந்து பொறுப்பற்று செயற்பட்டால் பெப்ரவரி 1 ஆம் திகதி நாடு மீண்டும் முடக்கப்படும் அபாயம் காணப்படுவதாக சுகாதார வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நாடு மூடப்படுமா என்பதை தற்போது 23

## வெளிநாட்டு கடன்களை நம்பி பொருளாதாரத்தை முன்னெடுக்க முடியாது

### அமைச்சர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

நம்பி தொடர்ந்தும் நாட்டின் பொருளாதாரத்தை 02

## கொரோனா 11 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 11 கோவிட் மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பா 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### கூறுவிலை கோரல்

எமது கொத்தணியினால் அமைக்கப்படுகின்ற புதிய தலைமைக் காரியாலயக் கட்டடத்திற்கு **ROLLING DOOR** புதிதாகச் செய்து பொருத்துவதற்கு தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. இதற்கான கூறுவிலையை சமர்ப்பிக்க விரும்புவோர் நேரில் பார்வையிட்டு கூறுவிலை சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கூறுவிலை முடிவுத் திகதி 20.01.2022 ஆம் திகதி மு.ப.11.00 மணிவரை.**

**திரு.செ.செல்வராசா,**
**தலைவர்,**
**வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி.**

**பிப்பிலிச் சந்தி,**
**மானிப்பாய்.**

(C-3521)


# அமைச்சர் சமல் முன்னிலையில் அடாவடியில் ஈடுபட்ட பிக்கு

(கொழும்பு)

அமைச்சர் சமல் ராஜபக்ச முன்னிலையில் பிக்கு ஒருவர் அடாவடியில் ஈடுபட்டதால் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது.

மகாவலி காணி பிரச்சினையை அடிப்படையாக கொண்டு இடம்பெற்ற வாய்த்தகராறு மோதல் நிலைமையை ஏற்படுத்தியிருந்தது.

இந்த காணி பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்வதற்காக அமைச்சர் சமல் ராஜபக்ஷவை சந்திப்பதற்கு சூரியவெவ கிராம மக்கள் அவருடைய அலுவலகத்திற்கு சென்றிருந்தனர்.

இதன்போது அங்கிருந்த தேரர் ஒருவருக்கும் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. அங்கிருந்த சிலருக்கு குறித்த பிக்கு தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்துள்ளார். எனினும் இறுதியில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ம)


இரண்டாம் ஆண்டு
பிரார்த்தனை நாள்



பிறப்பு 27.09.1955
இறப்பு 14.01.2020

அமரர்
**வயிரவன் குணமணி**

அம்மா....
நினைவுகள் மனதை வாட்டுகின்றது,
வழிகாட்டியாக வாழ்கிறீர்கள்...

(9656)

வீரபத்திரர் கோவிலடி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்



## காணிகள், கடைகள், வீடுகள் வாங்க விற்க

- யாழ். நகரப் பகுதியில் 7 பரப்புக் காணி மேல்மாடி கட்டடத்துடன் (யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக - கடந்த வருடம் 1 பரப்பு 8 கோடி என வங்கியால் பெறுமதியிடப்பட்டது.)
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மெயின் றோட்டில் 1 1/2 பரப்பு மற்றும் 5 1/2 பரப்பு, 3 1/2 பரப்பு புதிய வீட்டுடன்.
- நல்லூர் கோவில் வடக்கு வீதி, சங்கிலியன் வீதியில் 2 1/4 பரப்பு.
- யாழ். கைதடி ஏ9 வீதியில் 14 பரப்புக் காணி.
- யாழ். வேலணையில் 10 பரப்பு புகையிலைத் தோட்டக் காணி.
- வவுனியா நகரப் பகுதியில் மிகப் பிரபல்யமான இடத்தில் 6 பரப்புக் காணி.
- யாழ். இராச பாதை வீதியில் 40 பரப்பு காணி (மாவீரர் துயிலும் இல்லம் அருகாமை)
- வவுனியா ஏ9 வீதியில் (சாந்தசோலை) 30 பரப்புக் காணி.
- யாழ். நகர் IBC கட்டடத்திற்கு அருகாமையில் உள்ள வீதியில் 2 பரப்பு காணி.
- வவுனியா நகரப்பகுதியில் மிகப் பிரபல்யமான பகுதியில் 11 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்கு.
- வவுனியா நகரப்பகுதியில் கந்தசாமி கோவில் வீதியும் பஜார் வீதியும் இணைக்கும் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
- வவுனியா ஏ9 வீதியில் புதிய பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் 4 பரப்புக் காணி.
- வவுனியா நுழைவாயிலுக்கு அருகாமையில் 100 பரப்புக் காணி (பிரித்துக் கொடுக்கப்படும்.)
- ஏ9 வீதியில் இயக்கச்சி 30 ஏக்கர் காணி.
- வன்னிப் பிரதேசத்தில் 50 ஏக்கர் உறுதிக் காணி இதில் ஒரு குளம் உண்டு தோட்டங்கள், விவசாயம், தனியார் நிறுவனம் என்பன அமைக்கலாம். (1 ஏக்கர் 25 இலட்சம்)
- ஆனையிறவுக்கும் நடுக்காட்டுச் சந்திக்கும் இடையில் 30 ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்கு.

வவுனியா பிரபல நகரப் பகுதியில் 4 பரப்பு,11 பரப்பு, 3 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு.

(9653, C-3536)

தொடர்பு
**VIMB, வங்களாவடி, வேலணை.**

**077 522 1132**
**077 493 4336**
**076 281 2188**


## பொருளாதார...

முன்னெடுத்துச் செல்ல முடியாது என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். வெளிநாட்டு அந்நிய செலாவணியை வழங்கக்கூடிய துறைகளை வலுப்படுத்துவதே நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அமையும். எமது நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு திருப்தியளிக்கும் அளவுக்கு வரும் வரையில் தரப்படுத்தலில் இலங்கை முன்நோக்கி நகராது. தரப்படுத்தல் நிறுவனங்கள் அதனை செய்யாது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை வரவழைக்க வேண்டும் என்றால், 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு போன்றவற்றை வழங்குவதால், அது நடக்காது. அந்நிய செலாவணியை உற்பத்தி செய்யக் கூடியவர்களை பலப்படுத்த வேண்டும் என்றார். (ம)


எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

## ஸ்ரீ குமரன் நகை மாளிகை

## Sree Kumaran Jewellers

அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய
தரம் குன்றாத தங்க ஆபரணங்களை
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

இல 74, பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

021 226 4465
077 873 3482

(9660)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனே என்னை வீழ்த்தினார்

## ரணில் பகிரங்கம்

(கொழும்பு)

**“2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது பிரபாகரன்தான் என்னைத் தோற்கடிக்க வைத்தார்” என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க பகிரங்கமாகவே தெரிவித்தார்.**

ரணில் விக்கிரமசிங்கவால் ஏன் இன்னும் ஜனாதிபதியாக முடியாமல் உள்ளது என ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “நான் இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். 1994 இல் சந்திரிகா மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் முடிவு மாறியது.

அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் என்னைத் தோற்கடிப்பதற்குத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே தீவிரமாகச் செயற்பட்டார்.

அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் பொதுவேட்பாளர்கள்தான் களமிறங்கினர்.

இனிவரும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடுவதா என்பது பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. நபர்களை விடவும் கொள்கைகளே முக்கியம்” என அவர் தெரிவித்தார். (நி-5)



# சுசிலின் பதவி நீக்கத்துடன் மௌனிகளான அமைச்சர்கள்

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுசில் பிரேமஜயந்தவின் பதவியைப் பறித்த பின்னர் அரசாங்கத்தை விமர்சித்து வந்த அமைச்சர்கள் மௌனிகளாக மாறிவிட்டனர் என்று தென்னிலங்கை அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தலைமையில் உருவாக்கப்பட்ட 11 கட்சிகளைக் கொண்ட மாற்று அணியினர், அதனையும் கூறமுடியாத நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் இணைந்து உருவாக்கிய மாற்று அணியின் எதிர்காலம் தற்போது கேள்விக் குறியாக மாறியுள்ளது.

அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், சுசில் பிரேமஜயந்தவை ஜனாதிபதி இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கினார்.

அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிக்க முடியாது எனவும் அப்படியான தேவை இருப்பவர்கள் எதிர்க்கட்சிக்கு சென்று அதனை செய்ய முடியும் என்ற செய்தியை கோட்டாபய இதன் மூலம் ஆளும் கட்சியினருக்கு வழங்கியிருந்தார்.

இச்சூழ்நிலையிலேயே சுசில் பிரேமஜயந்த பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர், அரசாங்கத்திற்குள் இருந்து அரசாங்கத்தை விமர்சித்து வந்தவர்கள் தற்போது வாய் மூடி மௌனிகளாக இருந்து வருகின்றனர்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்காத, ஆளும் கட்சிக்கு ஆதரவளித்து வரும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் மாத்திரம், அரச தலைவரின் சேதனப் பசளை கொள்கையை விமர்சித்து இருந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, அரசாங்கத்தில் இருந்து விலக தேவையான பின்னணியை தற்போது உருவாக்கி வருகிறது என்றும் தகவல் அறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)

# ஆட்சிக்காலத்தை நீடிக்க முயலாது உடன் தேர்தலை நடத்துங்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

(கொழும்பு)

“இந்த அரசை பதவி விலகுமாறு நாட்டு மக்கள் வலியுறுத்த ஆரம்பித்துவிட்டனர்.

எனவே, பதவிக் காலத்தை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது பற்றி கதைப்பதில் பயனில்லை. எனவே, கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே. தேர்தல் நடத்தப்பட வேண்டும்” என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்து சம்பந்தமாக ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில்அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான நடைமுறைகள் உள்ளன. ஐந்தாண்டுகளுக்கே ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் மக்களுக்குச் சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புகளை அரசு உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்யாமல் ஆட்சிக் காலத்தை நீடிக்க முற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

இந்த அரசை வீட்டுக்குச் செல்லுமாறு மக்கள் வலியுறுத்துகின்றனர். மக்களின் இந்தக் கோரிக்கைக்கு அரசு செவிமடுக்க வேண்டும்.

கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்போது எமது பலத்தையும் காட்டுவோம்” என அவர் தெரிவித்தார். (நி-5)

# லிட்ரோ தலைவர் பதவி நீக்கம்;

## எரிவாயு முனையத்திற்கு ஜனாதிபதி விஜயம்

(கொழும்பு)

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெசார ஜயசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டில் நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் போன்ற வற்றை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவராக ரேனுக பெரேரா நியமிக்கப்பட் டுள்ளதாகவும் தகவல்கள் தெரி விக்கின்றன.

இதேவேளை, கெரவலப் பிட்டிய லிட்ரோ எரிவாயு முனையத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. (நி-5)

# கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Zoom செயலி ஊடான “யாவர்க்கும் நலம்” எனும் நிகழ்ச்சித் தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெற்று வருகின்றது.

இக் கருத்தமர்வுகளில் பிரபல மருத்துவ நிபுணர்கள் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

“சிறுநீரக சனனித் தொகுதி நோய்கள்” எனும் தலைப்பில் நடைபெறவுள்ள கருத்தமர்வில் அனைவரும் பங்கேற்று பயன் பெறுமாறு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான Meeting ID-899 85282023, Passcode-354485 ஆகும். (4-5)

# கட்சியை விட்டு வெளியேறுங்கள்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகள் ஒத்துப் போகவில்லையென்றால், கண்ணியத்துடன் அரசாங்கத்தைவிட்டு வெளியேற வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை வெளியிடுவதை ஊடகங்களில் பார்த்ததாகவும் எனவே, ஆங்காங்கே சொல்லித் திரிவதை தவிர்க்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சரவையில் இருப்பதால் கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும் என்றும் தனியே மொட்டுக் கட்சி மீது குற்றம் சுமத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ‘விடுதலைப் பொங்கல்’





(குப்பிழான்)

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். முற்றவெளியில் விடுதலைப் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் அடிகளார், தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம், யாழ்.மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன்,

யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞரணி இணைப்பாளர் கே.கிருஷ்ணமீனன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன், முன்னாள் தமிழ் அரசியல் கைதிகள், அரசியல் கைதிகளின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முன்னாள் அரசியல் கைதிகள் உள்ளிட்ட சிலர் அரசியல் கைதிகளின் ஆடைகள் அணிந்து கலந்து கொண்டு பொங்கல் நிகழ்வுகளில் ஈடுபட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-5-18-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்
# இரண்டாம் நாள் முடிவில் இந்தியா முன்னிலை

இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதன்படி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இந்தியக் கிரிக்கெட் அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 57 ஓட்டங்களை பெற்றுள்ளது.


ஆட்டநேர முடிவில், புஜாரா 9 ஓட்டங்களுடனும் விராட் கோலி 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இந்தியக் கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்கா அணியுடன் ஒப்பிடுகையில் 70 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

கேப் டவுனில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 223 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, விராட் கோலி 79 ஓட்டங்களையும் புஜாரா 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.



தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், ரபாடா 4 விக்கெட்டுகளையும் மார்கோ ஜென்ஸன் 3 விக்கெட்டுகளையும் ஒலிவியர், லுங்கிடி மற்றும் மஹாராஜ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 210 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கீகன் பீட்டர்சன் 72 ஓட்டங்களையும் டெம்பா பவுமா 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பும்ரா 5 விக்கெட்டுகளையும் உமேஷ் மற்றும் ஷமி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் தாகூர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

13 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 57 ஓட்டங்களை பெற்றது.

8 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தை இந்தியக் கிரிக்கெட் அணி நேற்று ஆரம்பித்தது. (4-6)

# ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசை அஷ்வின் 2 ஆவது இடம்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் டெஸ்ட் போட்டிகளுக்கான தர வரிசை பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில், பந்து வீச்சாளர்கள் பட்டியலில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் 2 ஆவது இடம் வகிக்கிறார்.

முதல் இடத்தில் அவுஸ்திரேலியாவின் பட் கம்மின்ஸ் உள்ளார். 3-ம் இடத்தில் நியூசிலாந்தின் கைல் ஜேமிசன் உள்ளார். முதல் 10 இடங்களுக்குள் இந்திய வீரர் அஷ்வின் மட்டுமே இடம் பெற்றுள்ளார்.

இதேபோல், பட்டிங் தரவரிசையை பொருத்தவரை முதல் இடத்தில் அவுஸ்திரேலியாவின் லபுசேன் உள்ளார். 2-ம் இடத்தில் இங்கிலாந்தின் ஜோ ரூட்டும், 3-ம் இடத்தில் ஸ்டீவ் ஸ்மித்தும் உள்ளனர். 4-ம் இடத்தில் கேன் வில்லியம்சனும், 5-ம் இடத்தில் இந்தியாவின் ரோகித் சர்மாவும் உள்ளனர்.

இந்திய அணி கப்டன் விராட் கோலி 9-ம் இடத்தில் உள்ளார். (4-6)



தொழிலதிபர், கல்விக்காருண்யன் லயன்.ஈ.எஸ்.பி.நாகரத்தினத்திற்கு Global Peace பல்கலைக்கழகத்தினால் மனித நேயம் மற்றும் சமூக சேவைகளுக்காக கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. இக்கலாநிதி பட்டத்தினை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம் கடந்த 10 ஆம் திகதி வழங்கினார்.

# ஓய்வுப் பெறும் தீர்மானத்தை மீளப் பெற்றார் பானுக



இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் பானுக ராஜபக்ஷ, சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் தீர்மானத்தை மீளப் பெற்றுள்ளார்.

பானுக ராஜபக்ஷ விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் வைத்து சந்தித்து கலந்துரையாடியதற்கு பிறகு தான் ஓய்வு பெறும் எண்ணத்தை மாற்றியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அறிமுகப்படுத்தியுள்ள புதிய உடற்தகுதி நியமங்களுடன் இனி விளையாட முடியாது என கடந்த 3ஆம் திகதி கிரிக்கெட் நிர்வாகத்துக்கு அறிவித்திருந்த கடிதத்தில் பானுக ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

இதனைத்தொடர்ந்து லசித் மலிங்க உட்பட பல முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அவரது ரசிகர்கள் பலர் ஓய்வு குறித்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

தற்போது, பானுக ராஜபக்ஷ, ஓய்வு பெறும் தீர்மானித்தை மீளப் பெற்றுள்ளமை ரசிகர்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

30 வயதான பானுக ராஜபக்ஷ, இதுவரை 5 ஒருநாள் போட்டிகளில் 89 ஓட்டங்களையும் 18 இருபது-20 போட்டிகளில் 320 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். (4-6)



முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்நிலை உயிர்காப்பு(Life guard) சர்வதேச தர பயிற்சியை நிறைவு செய்தவர்களையும் சித்தியடைந்தவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (படம்- கனகராஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமக்கு வாழ்வளிக்கும் ஆதவனுக்கு
நன்றி சொல்லும் இத்திருநாளில்
இல்லங்களெங்கும் சௌபாக்கியம் பொங்கிட

# இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

(C-1582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டம் பயனற்றது

## அதற்கு அப்பால் சென்று தீர்வு வேண்டும்

### இதையே இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் முன்னிறுத்தியுள்ளோம்

### சுமந்திரன் எடுத்துரைப்பு

(நெளுக்குளம்)

**ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளே வழங்கப்படும் அதிகாரப் பகிர்வான 13 ஆவது திருத்தம் பயனற்றது என்பது எமது நிலைப்பாடு. ஆனால் அதைக்கூட இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றாத காரணத்தினால் 13 ஐ முழுமையாக நிறைவேற்றி அதற்கும் அப்பால் சென்று அதிகார ங்களை வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

இந்திய பிரதமருக்கான கடிதத்தை கையளிப்பதற்கு அதனை கைச்சாத்திட்டவர்கள் என்னையும் வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். அந்தக் கடிதம் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த சொல்லி கோரிக்கை விடும் கடிதம் என்று கூறுவது தவறு. அதிலே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்ன, இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு பிறகு இலங்கையிலே இடம்பெற்றிருக்கக் கூடிய முன்னெடுப்புக்கள் என்ன, இலங்கை அரசுகள் இந்தியாவிற்கு கொடுத்திருக்கும் வாக்குறுதிகள் என்ன என மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றது.

அதனடிப்படையில் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அத்தோடு நிற்காமல் அதற்கும் அப்பால் சென்று ஒரு அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை நாங்கள் நிறைவேற்றுவோம் என இலங்கை அரசு இந்தியா உட்பட உலக நாடுகளுக்கு தொடர்ச்சியாக வாக்குறுதி வழங்கியிருக்கின்றார்கள். அதைத்தான் இந்தக் கடிதம் கோருகின்றது. முதலில் 13 ஆம் திருத்தத்தை கோரும் கடிதமாகவே அந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

தமிழரசுக்கட்சி அதில் ஈடுபட ஆரம்பித்தபோது 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தமிழ் மக்களின் அபிலாசை அல்ல என்ற எங்களுடைய தெளிவான நிலைப்பாட்டை சொல்லியிருந்தோம். அது ஒரு அர்த்தமற்ற அதிகாரப் பகிர்வு முறை. மத்திய அரசு அந்த அதிகாரங்களை மீளப் பெற்றுக்கொண்டுள்ளது. ஆகையால் ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளே வழங்கப்படும் அதிகாரப் பகிர்வான 13 ஆவது திருத்தம் பயனற்றது என்பது எமது நிலைப்பாடு. ஆனால் அதைக்கூட இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றாத காரணத்தினால் அதை நிறைவேற்றி அதற்கும் அப்பால் சென்று கொடுத்த அதிகாரங்களை மீளப்பெற முடியாத ஒரு முறைமை வேண்டும் என்று இந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களாகிய எமக்கு உண்டு. அதனை உள்நாட்டிலே பிரயோகிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம். அந்த வகையில் சமஷ்டி கட்டமைப்பிலான அதிகாரப்பகிர்வு முறைதான் உகந்தது என்பதை இந்த கடிதம் எடுத்து சொல்கின்றது. தமிழரசுக்கட்சி அந்த கடிதத் தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கியதில் இருந்து அதன் பொருள், அதனுடைய நோக்கம், அது எதனைக்கோருகின்றது, அதன் தலையங்கம் அனைத்தையும் மாற்றியமைத்திருக்கின்றோம் என்றார் அவர். (4-5-299)

## வாகன இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2022.01.05 ஆம் திகதி யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

தற்போது காணப்படுகின்ற கொவிட்-19 நிலைமைகளின் கீழ் https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021211 7116 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்கான தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் வாகன திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (4-5)

## மீனவர்களின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த டிசெம்பர் 19 ஆம் திகதி சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற் படையினரால் கைது செய்யப்பட்டதுடன் 6 படகுகளும்கைப்பற்றப்பட்டன.

குறித்த மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப் பட்டுள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை மூன்றாவது தவணையாக குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, மீனவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நீதிமன்று நீடித்துள்ளது. (4-5-18-33)

## டிப்பர் மோதியதில் மின்கம்பம் முறிவு

### போக்குவரத்து பாதிப்பு



(குப்பிழான்)

மயிலிட்டி ஊரணிப் பகுதியில் கணவயல் பிள்ளையார் வீதியில் கடந்த செவ்வாய்க் கிழமை டிப்பர் மோதி வீதியோரமாக நாட்டப்பட்டிருந்த மின்கம்பம் முறிவடைந்து வீதியின் குறுக்காக வீழ்ந்துள்ளது. இதன் காரணமாக மேற்படி வீதியுடனான போக்குவரத்துத் தடைப்பட்டது.

இதனால், பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் அப்பகுதிப் பொதுமக்கள் இலங்கை மின்சார சபையினருக்கு உடனடியாக அறிவித்ததையடுத்துச் சம்பவ இடத்திற்கு விரைந்த மின்சார சபையினர் முறிந்த மின்கம்பத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். (4-5-18)

## உயிரிழந்த மீனவருக்கு நீதிகோரி போராட்டம் முன்னெடுப்பு

(அராலி)

மாதகல் கடலில் அண்மையில் மர்மமான முறையில் உயிரிழந்த மீனவரின் மரணத்திற்கு நீதி வழங்குமாறு கோரி நேற்று அவரது இல்லத்திற்கு முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது போராட்டக் காரர்கள் "மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து, மீனவக் குடும்பங்களில் பிள்ளைகள் வாழ்வாதாரத்தை உறுதிப் படுத்து, கடலில் தொடர்ச்சியாக நடத்தப்படும் படுகொலைகளை தடுத்து நிறுத்து, உயிரிழந்த மீனவர்களுக்கு இழப்பீட்டை வழங்கு" போன்ற கோசங்கள் எழுப்பி சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சிவனேசன் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், வலி.தென்மேற்கு மற்றும் வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், மீனவ அமைப்புகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (4-5-18-33-104)

## எரிவாயு சிலிண்டர் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி சந்தி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் எரிவாயு சிலிண்டர் ஒன்று களவாடப் பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த வீட்டில் வீட்டின் உரிமையாளர்கள் இருந்த போதும் மிகவும் நூதனமான முறையில் திருடர்கள் வீட்டினுள் சென்று எரிவாயு சிலிண்டரை திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் யாழ். நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் காரணமாக இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் தற்போது அதிகளவில் இடம்பெறுகின்றன. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கல்வியியற் கல்லூரிகளை மீண்டும் திறக்க அனுமதி

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரி களை நாளை சனிக்கிழமை முதல் மீண்டும் திறக்குமாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அதிகாரிகளுக்கு பணிப் புரை விடுத்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக அதிகரி த்து வரும் கொரோனா வைரஸ் தொற் றுக் காரண மாக தேசிய கல்வியியற் கல்லூ ரிகள் சில வாரங்களாக மூடப் பட்டுள்ளன.

இதேவேளை, தற்போது தகவல்தொழில் நுட்ப கற்கை நெறிகளை பின்பற்றும் உயர் தர மாணவர்களை உள் வாங்குவதற்காக புதிய ஆசி ரியர் பயிற்சி கல்லூரிகளை நிறுவுவதற்கும் கல்வி அமை ச்சர் தினேஷ் குணவர்த்தன பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


# தொண்டர்கள் தேவை

தற்கொலைகளைத் தடுப்போம்!

**உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?**

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமப்பவர்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் பெறுவதில்லை. நீங்களும் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்க்ள் மட்டுமே.

பயிற்சி நெறி மிக விரைவில்.
உடனே அழையுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
Sri Lanka Sumithrayo—Jaffna Branch
(யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் பின்னால்)

**077 900 8776** (மு.ப. 9.00 - பி.ப. 1.00)

(9642)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலகம் ஆதனப்பெயர் மாற்ற வெளிப்படுத்தல் தொடர்பானது

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 07, கரந்தன் நீர்வேலி வீதி, ஆதன இலக்கம் 18/1 (பகுதி) என்ற இலக்கத்தைக் கொண்டதும் "கீழ்காட்டுப்புலம் முருங்கைசிட்டி" நிலப்பரப்பு 01 குழி 13.85 கொண்ட கிராம சேவையாளர் பிரிவு : J /267 கோப்பாய் கோவிற்பற்று, ஊரெழு இறையில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் சொ.உ.கோ. மயில்வாகனம் சுப்பிரமணியம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தினை அம்பகர் ஒழுங்கை, பிறவுண் றோட், கொக்குவிலினை சேர்ந்த சுப்பிரமணியம் அன்பழகன் பெண் பிரதீபா (858663784V) என்பவர் நிலப்பரப்பு 01 குழி 13.85 இற்கு உரிமை கோருகின்றார்.

மேற்குறித்த இல: 18/1, (பகுதி) கரந்தன், நீர்வேலி வீதி ஆதனமானது (நிலப்பரப்பு 01 குழி 13.85) சமர்ப்பிக்கப்பட்ட மாதிரித்திரட்டின்படி பிரசித்த நொத்தாரிசு திருமதி.சுதா கஜேந்திரகுமார் அவர்களால் எழுதப்பட்ட 4303 ஆம் இலக்க 03.02.2021 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் முத்தையா கதிரவேலு பெண் கமலாதேவி (472043897V) என்பவரினால் ரூபா 1,000,000/= தரப்பற்றிக்கொண்டதன் மூலம் தடையற்ற ஆட்சியுமானது என சுப்பிரமணியம் அன்பழகன் பெண் பிரதீபா (858663784V) என்பவரிற்கு கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி 18/1 (பகுதி) நிலப்பரப்பு 01 குழி 13.85 இற்கு எல்லைகளாக கிழக்கு குறித்த 0033 ஆம் படத்தில் சுட்டிய 02 ஆம் இலக்க துண்டு. வடக்கு குறித்த 0033 ஆம் படத்தில் சுட்டிய 03 ஆம் இலக்க துண்டான 12 அடி அகலப்பாதை நிலம். மேற்கு வல்லிபுரம் தியாகராஜாவினது ஆதனம். தெற்கு சர்வானந்தா பெண் கமலநாயகிக்கும், கிருஸ்ணபிள்ளை ரகுராமுக்குரிய ஆதனங்கள். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சிறிதுர்க்கானந்தன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 0033 ஆம் இலக்க 01.08.2020 ஆம் திகதிய படத்தில் Lot – 01 என குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தினை சுப்பிரமணியம் அன்பழகன் பெண் பிரதீபா என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள். தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 28.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுப்பிரமணியம் அன்பழகன் பெண் பிரதீபா என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு, பிரதேச சபை**
**புத்தூர்.**
**14.01.2022**

(C-3524)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 77 சூரி 1 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L Security<br>தொ.இ: B/6435 | பிறப்பு: 1977இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 40 சூரி 12 செவ் 11 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA ஆங்கிலம் மொழி பெயர்பாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த சொந்த தொழில்<br>தொ.இ:G/6121 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் மட்டும்<br>தொ.இ: B/6445 | பிறப்பு: 1979 கிறிஸ்தவம் (RC)<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 84 சூரி 4.செவ் 1 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Nursing Diploma ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு ஆயின் அரச தொழில்<br>தொ.இ:G/6143 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 38½ செவ் 11 சூரி 6 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L (அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6466 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 58½ சூரி 8 செவ் 4<br>உயரம்: 157 cm<br>தகைமை/தொழில்: வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/6155 |
| பிறப்பு: 1991 கிறிஸ்தவம் (NRC)<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: சூரி 8 செவ் 11 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:பிரான்ஸ்<br>தொ.இ: B/6467 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 30 ½ சூரி 4 செவ் 7 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Bsc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/6172 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# மதிப்பு வாய்ந்த கடவுச்சீட்டு தரவரிசையில் இலங்கை பின்னடைவு

(கொழும்பு)

மதிப்புவாய்ந்த கடவுச் சீட் டுக்கள் தொடர்பான தரப்படுத்த லில் இலங்கை கடவுச் சீட்டு இவ்வாண்டு 102 ஆவது இடத் தைப் பெற்று தரப்படுத்தலில் மோசமான நிலையிலுள்ளது.

சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளின் கடவுச்சீட்டுக்கள் 2022 இற்கான உலகின் மிகச் சிறந்த கடவுச்சீட்டுகளாக தரப்ப டுத்தலில் முதலிடத்தைப் பெற் றுள்ளன.

இந்த இரண்டு நாடுகளின் கடவுச்சீட்டுகள் உள்ளவர்கள் 192 நாடுகளுக்கு விசா அனுமதி பெறாமல் செல்ல முடியும்.

ஹென்லி பாஸ்போர்ட் குறியீ ட்டு **(Henley Passport Index)** அறிக்கையில் இந்த தகவல் தெரி விக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இரண்டாம் இடத்தை ஜேர்மனியும் தென் கொரியாவும் பிடித்தன. ஆக மோசமான கடவுச்சீட்டுகளாக ஆப்கானிஸ்தான் (111) ஈராக் (110) கடவுச்சீட்டுக்கள் குறிப்பிடப்பட்டு ள்ளன. (நி-5)

## பொது அறிவித்தல் வலிகாமம் தெற்கு பிரதேச சபை

எமது சபையின். பதிவேட்டின் பிரகாரம் சுன்னாகம் மத்தி பகுதியிலுள்ள கினா மரம் வீதியினை "முத்துக்கிருஸ்ணர் வீதி" என பெயர் மாற்றம் செய்யுமாறு அப் பகுதி மக்களால் கோரிக்கையொன்று எமது சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு

வீதியின் இலக்கம்:-NJVSE 281.
வீதியின் நீளம் - 500 மீற்றர்.
வீதியின் ஆரம்பம் :- காங்கேசன்துறை வீதி.
வீதியின் முடிவு:- வயல்வெளி.
கிராம சேஉ பிரிவும் இலக்கமும் :- சுன்னாகம் நகர மத்தி, J/198.

எனவே இவ் வீதி பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 28/01/2022 ஆம் திகதிக்குள் எழுத்துமுலம் "தவிசாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்" எனும் முகவரிக்கு அறியத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க.தர்ஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**சுன்னாகம்.**

**14/01/2022.**

(c-3523)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களால் முன்னெடுக்கப்படும் விழாக்கள் சமூகத்துடன் பின்னிப் பிணைந்துள்ளன

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

விவசாயம் செழிப்படையக் காரணமான சூரிய பகவானுக்கு நன்றி நவிலும் தைப் பொங்கல் தினம், இந்துக்களின் சிறப்புமிக்க கலாசாரம் மற்றும் மதரீதியிலான பண்டிகையாக விளங்குகின்றது. உலக வாழ் இந்துக்களுடன் இணைந்து இப்பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர இந்து மக்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொங்கல் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தைப்பொங்கல் தினப் பாரம்பரியக் கொண்டாட்டங்களைக் கலாசார ரீதியாகச் சிறப்பாகக் கொண்டாடுவதன் மூலம் எதிர்காலத்தில் வளமான பயிர் அறுவடைக்கு சூரிய பகவானின் ஆசீர்வாதங்களும் பாதுகாப்பும் கிடைக்கின்றன என்பதே இந்து மத நம்பிக்கையாகக் காணப்படுகிறது. சுபீட்சத்துக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடும் வகையில் இந்துக்களினால் முன்னெடுக்கப்படும் சடங்குகள், காலங்காலமாக இலங்கைச் சமூகத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன.



இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையுடன் வளமான எதிர்காலத்தை நோக்கிய எமது பயணம், பசுமை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும். இது பசுமை விவசாயத்துக்கான தேசிய கொள்கைக்குப் பலன்தரும் என்பதே பெரும்பான்மையானோரின் நம்பிக்கையாக இருக்கின்றது.

அந்த நோக்கத்துக்கு இந்தத் தைப்பொங்கல் கொண்டாட்டம் மிகுந்த உற்சாகத்தைத் தருவதாக நான் நம்புகிறேன்.

இந்த வருடமும், சுகாதாரத் துறையின் ஆலோசனைப்படி உங்களதும் உங்கள் அன்புக்குரியவர்களதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே தைப்பொங்கலை அனைவரும் கொண்டாட வேண்டும். பாதுகாப்பான நாட்டின் செழிப்பு மற்றும் வளத்துக்காக அர்ப்பணித்துள்ள உங்களுக்கு சூரியபகவானின் ஆசீர்வாதமும் பாதுகாப்பும் எப்போதும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-5)

# பல்கலைக்கழக செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள சில நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்து உடனடியாக முழு எண்ணிக்கையிலான மாணவர்களுடன் பல்கலைக்கழக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஒரு சந்தர்ப்பத்தில் 50 சதவீத மாணவர் எண்ணிக்கையுடன் பல்கலைக்கழக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

சகல மாணவர்களையும் உடனடியாக அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இந்நிலையில் பரீட்சைகளை நடத்துதல், இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான செயற்பாடுகள் என்பன தற்போது பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்படுவதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-5)

# வீதி விதியை மீறிவந்த பேருந்தை திணறவிட்ட நபர்

(கொழும்பு)

வீதி விதிமுறைகளை மீறி தவறான பாதை வழியில் வந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து ஒன்றை இடைமறித்து இளைஞர் ஒருவர் முன் செல்ல விடாமல் தடுத்து நிறுத்திய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இது குறித்த காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவிவருகிறது. கொழும்பு - கண்டி பிரதான வீதியின் பஸ்யால சந்தியில் நடந்த குறித்த சம்பவம் அந்த பாதையில் பயணித்த வாகனம் ஒன்றின் முன்பக்க கமராவில் பதிவாகியுள்ளது.

காணொளி காட்சிகளின்படி, போக்குவரத்து விதிகளை மீறி வீதியின் தவறான பக்கத்தில் பயணித்த பேருந்தை நகரவிடாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் அதற்கு வழிவிட மறுப்பது பதிவாகியுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர் தயங்காமல் பேருந்தின் முன் நின்று, பேருந்தை பின்னோக்கிச் செல்ல வைத்ததுடன், சரியான பாதையில் பயணிப்பதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

எவ்வாறாயினும், பேருந்து ஓட்டுநர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரை திட்டியதை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



அனைத்து உள்ளங்களிலும் அன்பும் ஆனந்தமும் பொங்கட்டும்

புதிய அபிலாஷைகளுடன் பிறக்கும் தமிழர் தைத்திருநாள் அனைவருக்கும் நோய் நொடிகளற்ற சகல வளங்களையும் செல்வங்களையும் நல்கி தேசத்தினை வளம் பெறச் செய்யட்டும்.

இலங்கை வங்கியின் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

1975 BOC CALL CENTRE

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

(C-1531)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைகள் இயங்காத நிலையில்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பல லட்சம் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தைகள் யாவும் மூடப்பட்டு இயங்காத நிலையில் காணப்படுகின்றன.



அதாவது மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட திறன்பட இயங்கி வந்த பாண்டியன்குளம் பொதுச் சந்தை, நட்டாங்கண்டல் பொதுச் சந்தை, பாலிநகர் பொதுச்சந்தை, விநாயகபுரம் பொதுச்சந்தை, கொல்லவிளாங்குளம் பொதுச்சந்தை, பனங்காமம் பொதுச் சந்தை ஆகிய பொதுச் சந்தைகள் முழுமையாக செயலிழந்து இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக கடந்த காலங்களில் 300 க்கும் மேற்பட்டவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்து குறித்த சந்தைகள் கடந்த 2013ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் கோடிக்கணக்கான நிதிகளைச் செலவிட்டு புனரமைக்கப்பட்டு புதிதாக திறந்து வைக்கப்பட்டன.

சந்தைகள் அனைத்தும் கடந்த நான்கு ஆண்டுகளாக மூடப்பட்ட நிலையில் கால் நடைகளின் உறைவிடங்களாக காணப்படுகின்றன.

எனவே குறித்த சந்தைகளை இயக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-5-315)

# மணல் அகழ்வால் வீதிகள் சேதம்

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி,முரசுமோட்டை மற்றும் ஊரியான் ஆகிய பகுதிகளில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வினால் வீதிகள் முழுமையாக சேதமடைந்து வருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊரியான் , முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தினமும் பதினைந்துக்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் மணல் கொண்டு செல்லப்படுகிறது.

இதனால் வீதிகள் முழுமையாக சேதமடைந்து காணப்படுகின்றன. குறிப்பாக இந்த பிரதேசங்களில் காணப்படுகின்ற விவசாய வீதிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் பாதைகளும் சேதமடைந்து பயணிக்க முடியாத நிலையில் உள்ளன.

எனவே இந்த பிரதேசத்தில் இடம் பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு இராணுவ காவலரண்களை அமைத்து மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

# அருகி வரும் நிலையில் மன்னார் கழுதைகள்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தை அடையாளப்படுத்தும் அளவுக்கு பிரசித்தி பெற்றது கழுதைகள். மன்னாரில் உள்ள பிரதான வீதிகள் உள்ளடங்கலாக எல்லா இடங்களிலும் எளிதாக காணக்கூடிய கழுதைகள் வீதிகளில் மனிதர்களால் வீசப்படும் பொலித்தீன்களையும் குப்பைகளையும் உண்டு வாழ்கின்றன. கழுதையானது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விலங்காக காணப்படுகிறது.


கழுதைப்பால், மனித பால் போன்று குறைந்த புரதமும் கொழுப்பும் காணப்படுவதுடன் லக்டோஸ்ீம் கொண்டது என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு வேளாண்மை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது

மேலும் கழுதைப் பாலில், விற்றமின் A,B-1,B-2,B-6 விற்றமின் D விற்றமின் E உள்ளது. கழுதைப்பாலில் இருந்து தயாரிக்கப்படும் சோப், கிறீம், மற்றும் இதர பொருட்களுக்கு சில நாடுகளில் நல்ல சந்தை மதிப்பு உள்ளது. அதே நேரம் கழுதைப்பால் அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருத்துவத்துறைக்கு பயன் படுத்தப்படுகின்றது

பராமரிப்பற்ற தன்மை விபத்துக்கள், உணவு இன்மை, நோய்த்தாக்கம் உட்பட பல காரணங்களால் இந்த கழுதைகளின் இனப் பெருக்கம் மற்றும் எண்ணிக்கை குறைவடைந்து ள்ளது.

எனவே மன்னார் மாவட்ட கழுதைகளை பயனுள்ள விலங்காக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். (4-5-285)

# வாள்களுடன் இருவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டகச்சி மாயவனூர் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய இருவர் வாள்களுடன் நேற்று முன்தினம் கைது செய் ஷயப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபட்டதுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.(4-5-315-316)

# துவிச்சக்கரவண்டி திருட்டு

(குருமன்காடு)

வவுனியா நகரிலுள்ள தனியார் நிதி நிறுவனம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி திருடப்பட்டமை தொடர்பில் பொலிஸார் பொதுமக்களின் உதவியினை நாடியுள்ளனர்.

வவுனியா முதலாம் குறுக்குத்தெரு வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி நேற்று முன்தினம் இனந்தெரியாத நபரினால் களவாடப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் துவிச்சக்கரவண்டி உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டினையடுத்து குறித்த தனியார் நிதி நிறுவனத்தின் சிசிரிவி கணொளி உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் துவிச்சக்கரவண்டியினை திருடிச் சென்றவரின் உருவம் சிசிரிவி கணொளியில் பதிவாகியுள்ளதுடன் அவர் தொடர்பில் விபரம் தெரிந்தால் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறும் பொதுமக்களுக்கு பொலிஸார் அறிந்துள்ளனர். (4-5-250)

# மருத்துவமனைக்கான உள்ளக வீதிகளை அமைத்து தரவும்

## கிளிநொச்சி சுகாதார பணிப்பாளர் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் அமைந்துள்ள வடமாகாண தொற்று நோயியல் மருத்துவமனைக்கான உள்ளக வீதிகளை அமைத்துத் தருமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே குறித்த கோரிக்கையை முன்வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிருஸ்ணபுரம் பகுதியில் அமைந்துள்ள வடமாகாணத்திற்கான தொற்று நோயியல் மருத்துவமனையானது 22 ஏக்கர் வரையான காணியில் அமைந்துள்ளது. இந்த மருத்துவமனை வளாகத்தில் உள்ள சிகிச்சை நிலையங்கள் மற்றும் விடுதிகள் என்பவற்றுக்கு வெளியிடங்களிலிருந்து நோயாளர்களை கொண்டு சேர்ப்பதில் உள்ளக வீதிகள் இன்மையால் சிரமங்கள் காணப்படுகின்றன.

எனவே இந்த மருத்துவமனைக்கான உள்ளக வீதிகளை அமைத்து தருமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-5-315)

# விண்ணப்பதாரர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இளைஞர்-யுவதிகளின் முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் செயற்பாட்டினூடான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து நீர் உயிரின வளர்ப்பு கற்கைநெறி வதிவிடப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இப் பயிற்சிநெறிகள் தொடர்பான பூரண விளக்கத்தினை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குவதற்கான கலந்துரையாடல் அடுத்த மாதம் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சு மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே விண்ணப்பதாரர்கள் அனைவரும் கலந்து கொண்டு தமக்கான தகுந்த பயிற்சி நெறியினைத் தெரிவு செய்து கொள்ளுமாறும் தமது பதிவினை மேற்கொள்ளுமாறும் இளைஞர் விவகார அலகின் உதவிச் செயலாளர் சு.சிவப்பிரியா அறிவித்துள்ளார். (4-5)

# ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் சர்வதேச, தேசிய மட்ட அடைவுகளையும் விருதுகளையும் வென்ற சாதனையாளர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு 2019 - (2022) நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வலம்புரி விருந்தினர் விடுதியில் காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-5)

# பனி மூட்டத்தால் மக்கள் அசௌகரியம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் தொடரும் பனி மூட்டம் காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

வவுனியாவில் கடந்த சில தினங்களாக காலை வேளைகளில் அதிக பனி மூட்டமாக காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள் என பலரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். (4-5-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா நோயாளிகளை இரும்பு பெட்டி முகாம்களில்

# தனிமைப்படுத்தும் சீனா

(பீஜிங்)

**சீனாவில் கொரோனா வைரஸ் பாதித்தவர்களை பெரிய இரும்பு பெட்டி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதைக் காண்பிக்கும் காணொளிகள் தற்போது வைரலாக பரவி வருகின்றன.**

இதற்காக வரிசையாக இரும்பு பெட்டிகள் கொண்ட முகாம்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஷிஜியா சுவாங் மாகாணத்தில் 108 ஏக்கர் பரப்பளவில் தனிமைப்படுத்தப்பட்ட வளாகம் அமைக்கப்பட்டுள்ளது

சீனாவின் பீஜிங் மாகாணத்தில் அடுத்த மாதம் குளிர்கால ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளதையடுத்து கொரோனா இல்லா சீனா என்ற கொள்கை அடிப்படையில், கொரோனாவை ஒழிக்க லட்சக்கணக்கான மக்களை அந்நாட்டு அரசாங்கம் தனிமைப்படுத்தி வைத்துள்ளது.

கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் அனைவரும் ஒரு படுக்கை, கழிப்பறை மட்டுமே உள்ள இரும்பு பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். சீனாவில் யாராவது ஒருவருக்கு கொரோனா ஏற்பட்டால்கூட அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் அழைத்து வரப்பட்டு இரும்பு பெட்டிகளில் 2 வாரம் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

55 லட்சம் மக்கள் தொகை கொண்ட அன்யாங்கைத் தவிர மற்ற நகரங்களில் ஒமிக்ரோன் பாதிப்பு 2 பேருக்கு மட்டுமே கண்டறியப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மோப்ப சக்தியால் கண்ணிவெடிகளை

# கண்டுபிடித்த எலி உயிரிழப்பு

(கம்போடியா)

கம்போடியாவில் நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகளை மோப்ப சக்தியால் கண்டுபிடித்து நாட்டின் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருந்த எலி தற்போது உயிரிழந்தது.

தன்சானியா நாட்டில் பிறந்த ஆபிரிக்க வகை எலி தான் மகவா. இந்த எலிக்கு மோப்ப சக்தி இருந்திருந்த நிலையில், இதனை அதிகரிக்க கம்போடியா நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு எலிக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

பெல்ஜியத்தை தலைமை இடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் நிறுவனமான APOPO நிறுவனத்தின் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற எலிகளை ஹீரோ ரேட்ஸ் என அழைத்தது.

எலிகள் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களை மோப்பம் பிடித்து சொல்வதால், மனித உயிர்கள் பலியாவதை தவிர்க்க முடிகிறது.

இந்த ஹீரோ ரேட் மகவா, இதுவரை 71 கண்ணிவெடிகளையும், 38 வெடி பொருட்களையும் தனது மோப்ப சக்தியால் கண்டறிந்திருப்பதாக நிறுவனம் தெரிவித்தது.

தற்போது குறித்த மகவா எலி உயிரிழந்துவிட்ட நிலையில், குறித்த நிறுவனம், தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளது. (நி-5)

## தீப்பெட்டிக்குள் அடங்கிய புடைவை

# நெசவாளரின் அசத்தலான செயல்

(டில்லி)

இந்திய மாநிலமான தெலுங்கானாவில் கைத்தறி நெசவாளர் ஒருவர் தீப்பெட்டி டப்பாவிற்குள் பொருத்தக் கூடிய புடைவையை நெய்து அசத்தியுள்ளார்.



தெலுங்கானா ராஜாண்ணா சிர்சில்லா மாவட்டத்தைச் சேர்ந்த விஜய் என்பவரே இந்த புடைவையினை நெய்துள்ளார்.

இந்த புடைவையை தெலுங்கானா அமைச்சர் சபிதா இந்திரா நெட்டிக்கு பரிசாக வழங்கியுள்ளார்.


தீப்பெட்டியில் பொருத்தக் கூடிய இந்த புடைவையை உருவாக்க 6 நாட்கள் செலவானது என்றும், இயந்திரம் கொண்டு தயாரித்தால் வெறும் மூன்று நாட்களில் தயாரிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

கையால் நெசவு செய்த இந்த புடைவையின் விலை இந்திய மதிப்பில் ரூ.12 ஆயிரம் என்றும், இயந்திரத்தின் மூலம் தயார் செய்யும் புடைவையின் விலை ரூ. 8 ஆயிரம் என்றும் தெரிவித்தனர்.

2015ம் ஆண்டு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமாவுக்கு சுப்பர் ஃபைன் பட்டுப் புடைவையை இவர் பரிசாக அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு

# ஏழுமலையான் கோவில் சொர்க்கவாசல் திறப்பு



(திருப்பதி)

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. வைகுண்ட ஏகாதசி தினத்தன்று வைஷ்ணவ ஆலயங்களில் சொர்க்க வாசல் திறக்கப்படுவது வழக்கம். இதனையொட்டி, திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ஏழுமலையான் கோவில் 4 தொன் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பார்ப்பதற்கே மிகவும் அழகாக காட்சியளிக்கிறது. (நி-5)

## இராசிபலன்

14.01.2022
தை 01, வெள்ளிக்கிழமை
துவாதசி முன்னிரவு 11.58 மணிவரை

ரோகிணி முன்னிரவு 10.06 மணிவரை
சுபநேரம் 6.34-8.04 மணிவரை
இராகுகாலம் 11.04-12.34 மணிவரை

சபரிமலை ஜோதி தரிசனம்
சந்திராஷ்டமம்: சுவாதி, விசாகம்
தைப்பொங்கல் வளவன்

**மேஷம்** – தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** – திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டல் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** – புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கடகம்** – புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** – வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகளின் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** – குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், தொழிலில் இருந்த எதிர்ப்புகள் மாறும், வழிபாட்டல் பெருமை காண வேண்டிய நாள், பாக்கிகள் வசூலாகும்.

**துலாம்** – மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** – எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** – இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலனில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** – அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடங்குவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிறர் உதவியுண்டு.

**கும்பம்** – மனதில் தோன்றுவதை செய்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** – முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

மற்றவர்கள் உன்னை ஏமாற்ற பாதிக் காரணம் நீதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைப்பு!

# எதிரணிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு எடுத்துள்ள முடிவானது, ஜனநாயக விரோதச் செயலாகும் என விமர்சித்துள்ள எதிர்க்கட்சிகள், உடனடியாக தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி உள்ளன.**

2018 பெப்ரவரியில் தேர்தல் நடத்தப்பட்ட 340 உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது. இதனால் தேர்தலும் ஓராண்டு பிற்போகும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சுகாதார நிலைமை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு உரிய வகையில் செயற்படுவதற்கு நல்லாட்சியின்போது வாய்ப்புக் கிடைக்காமை ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தேர்தலை எதிர்கொள்ள அஞ்சியும், படுதோல்வியைத் தவிர்ப்பதற்காகவுமே அரசு பதவிக் காலத்தை நீடிக்கும் கைங்கரியத்தை கையாண்டுள்ளது என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

"மக்கள் ஆணையை மீறும் வகையில் பதவிக்காலம் ஓராண்டு நீடிக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக விரோதச் செயலாகும்.

இந்த நடவடிக்கையை அரசு மீளப்பெறவேண்டும். உரிய காலப் பகுதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும்" என்று எதிரணிகள் வலியுறுத்தியுள்ளன. (நி-5)

# எரிவாயு தட்டுப்பாடு சில நாட்களுக்கு தொடரும்

(கொழும்பு)

எரிவாயு தட்டுப்பாடு மேலும் சில நாட்களுக்கு தொடரும் என எரிவாயு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

டொலர் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்தும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக லாஃப்ஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ. கே.எச்.வேகப்பிட்டிய ஊடகமொன்றிற்கு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் குறித்த நிறுவனத்திற்குச் சொந்தமான 10,000 தொன் எரிவாயு அடங்கிய கப்பல் ஒன்று கடந்த் செவ்வாய்க்கிழமை நாட்டை வந்தடைந்தது.

குறித்த எரிவாயு தொகை உரிய தரத்துடன் உள்ளமை உறுதி செய்யப்பட்டமையை அடுத்து அதனை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர, 10 நாட்களுக்கு ஒரு முறை அவ்வாறான கப்பலை நாட்டுக்குக் கொண்டு வருவத ற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லாஃப்ஸ் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். (நி-5)

# கடந்த வருடத்தில் மட்டும்

## 1,400 பில்லியன் ரூபாய்கள் அச்சிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

கடந்த வருடத்தில் மாத்திரம் மத்திய வங்கி 1,400 பில்லியன் ரூபாவை அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர்.ஏ.அனில் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் அச்சிடப்பட்ட மிகப் பெரிய தொகை இது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படலாம்

## மத்திய வங்கி ஆளுநர்



(கொழும்பு)

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மீண்டும் அனுமதி வழங்க வாய்ப்பு இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர்,

நாட்டிற்கு பெருமளவிலான அந்நியச் செலாவணியைத் பெற்றுத்தரக்கூடிய சுற்றுலாத் துறை போன்ற துறைகளில் எதிர்வரும் மாதங்களில் ஸ்திரத் தன்மையினை ஏற்படுத்துவதன் மூலம் இதனை சாத்தியப்படுத்தலாம் எனத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்,

"வாகனங்கள் மற்றும் ஓடுகள் தவிர அத்தியாவசியமற்ற அனைத்துப் பொருட்களும் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதன் மூலம் பெருமளவிலான அந்நிய செலாவணி நாட்டை விட்டு வெளியேறுகிறது" எனத் தெரிவித்தார். (நி-5)

# பரசூட் மரத்தில் சிக்கியதில் ரஷ்ய பிரஜை காயம்

(கொழும்பு)

பரசூட்டில் பயணம் செய்த போது 30 அடி உயரமான மரத்தில் பரசூட் சிக்கியதால் அதில் பயணம் செய்த ரஷ்ய பிரஜை கீழே விழுந்து காயமடைந்துள்ளார்.

கண்டி கலஹா [illegible] பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் குறித்த நபர் கண்டி போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

# பொல்லாப்பு

எந்தவிதமான பயனும் கருதாது நீங்கள் ஒருவருக்கு உதவப் போகும் போது அதில் ஒரு சிறு தவறு நடந்து விட அல்லது நடக்காமலிருந்தும் அது வலியக் கண்டு பிடிக்கப்பட அதனால் உதவி மனப்பான்மை கொண்ட நீங்கள் மிகுந்த வெறுப்பும் மன வேதனையும் அடையக் கூடும்.

ஒரு தனி மனிதன் அத்துணை நற்பெயரையும் ஒரே தட்டாக தட்டிக் கொண்டு போகிறான் என்றதுமே சுற்றியிருக்கும் கூட்டம் பொறாமைத் தீயில் வெந்து அதன் மூலம் கிடைக்கும் கரியை உங்களது நல்ல உள்ளத்தில் பூசப் பார்க்கும்.

நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள், ஓரளவு தொடர்புடையவர், முற்றிலும் தொடர்பற்றவர் என்ற மூவகை பிரிவினருள் பின்னிருவரும் சமய சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டே தான் இருப்பார்கள் குற்றம் சாட்டுவதற்கு.

இன்னும் சொல்லப்போனால் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் கூட நம்முடைய உதவி மனப்பான்மையின் மீதும் உதவி செய்த வழிவகையிலும் குற்றம் கண்டுபிடிக்கக் கூடும். உங்களது உதவி சுயநலமான உள்நோக்கம் கொண்டது என்று மிகப் பெரிய குண்டைத் தூக்கி உங்கள் மீது போடக்கூடும்.

இத்தகைய பல்வேறு நிலைகளை உதவி மனப்பான்மை உள்ளவர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து வைத்திருக்க வேண்டும்.

மாறாக நல்லது செய்யப்போகப் பொல்லாப்புத்தான் மிச்சம். இனி யாருக்குமே உதவக் கூடாது ஆகிய தவறான முடிவுக்கு வந்து விடக் கூடாது.

பல ஆயிரம் சதுர அடிகளை வளைத்து மடக்கி ஒரு பெரிய அணையைக் கட்டிவிட்டு அதை இடித்து தகர்க்கக் கூடிய ஓர் ஓட்டையும் விட்டு வைப்பதில் என்ன பயன் இருக்க முடியும்?

கூலிக்கு செய்வதாக இருந்தாலும் சரி உதவியாகச் செய்வதாக இருந்தாலும் சரி முடிந்த அளவிற்கு எவரும் குறை சொல்லாதபடி எந்த ஒரு காரியத்தையும் நிறைவாகச் செய்து முடிக்க வேண்டும்.

மேற்கூறிய மூன்று பிரிவினரிடமும் சில யோசனைகளைக் கேட்டுக் கொள்ளலாம்- அவர்களை அணைத்துச் செல்ல.

அதையும் மீறிப் பொல்லாப்பு வந்து சேருமானால் அதைத் தாங்கிக் கொள்ளும் மனநிலையையும் உண்மையிலேயே உங்களால் தவறு நேர்ந்திருக்குமானால் அதை உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையும் உங்களுக்கு இருக்க வேண்டும். இவை அனைத்தும் சேர்ந்துதான் உதவி மனப்பான்மையின் முழு வடிவம் ஆகும்.

எல்லாவற்றிக்கும் முன்னதாக நற்பெயரைக் காட்டிலும் அதிகமாக நம்மை வந்து சேரக்கூடிய உடல் சிரமத்தையும் உள்ளச் சிரமத்தையும் பொருட் சிரமத்தையும் மேற்கொள்ளுமளவிற்கு உதவிய உரிய நபர் தகுதி படைத்தவர் தானா என்பதை அறிய மட்டும் தராசைத் தூக்கத் தயங்காதீர்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லோரும் நலமே வாழ வழி பிறக்க வேண்டும்



இன்று தைப்பொங்கல் திருநாள். இது தமிழ் மக்களின் ஓர் இனிய பெருநாள். நல்ல இனிப்பான பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்கு படைத்து வழிபாடியற்றும் மங்கலத் திருநாள் இன்றாகும்.

முற்றத்திலே மூன்று கல்லை வைத்து அடுப்பாக்கி புதுப்பானையிலே புத்தரிசிப் பொங்கலிட்டு தேன், நெய், சர்க்கரை, முந்திரி வற்றல், கஜு முதலானவற்றையும் போட்டு இனிக்க இனிக்கப் பொங்கலாக்கி நெல் வயலில் நெல் மணி விளைய உதவிய சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக இந்தப் பொங்கல் விழாகளை கட்டுகிறது.

காலையில் எழுந்து ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்து இறைவனை வணங்கி வழிபட்டு மகிழ்ந்திருக்கும் மங்கல நன்னாள் இந்தத் தைப்பொங்கல். இந்த நல்ல நாளிலே மூத்தோரை மதித்து வணங்கி ஆசி பெற்று உறவுகளுடன் கூடி இருந்து பொங்கலை உண்டு மகிழும் மங்கல நன்னாள் இந்தத் தைப்பொங்கலாகும்.

ஆண்டவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி எல்போரும் சுகமே வாழ வழி பிறக்க வேண்டும் என்று பிரார்த்தித்து "பொங்கலோ பொங்கல்" என்று வாழ்த்தி அருளாசிகள் நல்கி வாழ்த்துக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**
**2 ஆவது குருமகா சந்நிதானம்,**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்.**

## இறைவனை நோக்கி உங்கள் உள்ளங்கள் என்றும் நன்றியால் பொங்கட்டும்



இலங்கையிலும் புலம்பெயர்ந்து உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தமக்குரிய தனித்துவமான நன்றியின் பெருவிழாவான பொங்கல் பெருவிழாவைக் கொண்டாடும் வேளை பொங்குக நன்றியால் பொங்குக - இறை அளித்த தரையை எண்ணி - தரை அளித்த விளைவை எண்ணி - பொங்குக நன்றியால் பொங்குக என்ற பாடல் மூலம் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

தொழுநோய் நீங்கிய பத்துப் பேரில் ஒருவர் மட்டும் இயேசுவிடம் வந்து அவருடைய காலில் முகம் குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். இயேசு அவரைப் பார்த்து பத்துப் பேரின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேரும் எங்கே என்று கேட்டு நன்றி கூறுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார்.

நன்றி கூறும் நல்ல பண்பு அனைத்து மனிதருக்கும் இருக்க வேண்டிய மிகவும் தேவையான ஒன்று. ஆனால் அநேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்து விடுகிறோம். இது அவர்கள் பணி - இது அவர்கள் கடமை - அவர்கள் செய்யவே வேண்டும் என்றே எண்ணுகிறோம். முதலில் நம்மைப் படைத்த இறைவன் எமக்கு அன்றாடம் பொழியும் வரங்களுக்கு இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

அடுத்து நம்மோடு வாழும் மனிதர்கள் மட்டில் நன்றியாக இருப்போம். அன்புடைய பெற்றோர், அறிவூட்டும் ஆசிரியர்கள், வழிகாட்டும் குருக்கள், துணை புரியும் உபகாரிகள் என அனைவர் மேலும் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். இயற்கையுடனும் நன்றியாக இருப்போம். மண்ணை நேசிப்போம். மரங்களை வளர்ப்போம்.

இறைவனை நோக்கி உங்கள் உள்ளங்கள் என்றும் நன்றியால் பொங்கட்டும் என இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**கலாநிதி**
**யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
**ஆண்டகை, யாழ்.ஆயர்.**

## உழைப்பினால் கிடைக்கும் ஊதியத்தை பக்குவமாய் பயன்படுத்துவோம்



அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக. சைவத் தமிழர் பண்பாட்டில் தைப்பொங்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். இயற்கைத் தெய்வமாகிய சூரியனைக் கண்கண்ட தெய்வமாக வணங்குபவர்கள் தமிழர்கள். வீடு விடிய வேண்டும், நாடு விடிய வேண்டும் எனப் பிரார்த்தனை செய்வதற்காகப் பொங்கிப் படைக்கும் திருநாள் தைப்பொங்கலாகும்.

வீட்டு முற்றத்தில் சாணியால் மெழுகி மாவினால் கோலமிட்டுக் குத்து விளக்கு ஏற்றிப் படையல் வைத்துப் பகலவனாகிய சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளே தைப்பொங்கலாகும். பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி செலுத்தும். இத்திருநாளில் அனைவரும் ஒன்றுபட்டு வழிபாடு செய்வோம். இயற்கை வளம் செழிக்க வேண்டும்.

அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும். தர்மம் நிலைக்க வேண்டும் என நாம் கடவுளிடம் மன்றாட வேண்டிய திருநாள் தைப்பொங்கல் ஆகும். எம்மண்ணில் நீதியான வாழ்வு கிடைக்கவும் வளங்கள் செழிக்கவும் மனதார வழிபாடு செய்வோம்.

ஈழத் தமிழர்களிடையே உண்மையான ஒற்றுமை உருவாக வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுப்போம். எமது பாரம்பரியக் கலைகள், மரபுகள் சிதைந்து விடாது பாதுகாக்க முன்வருவோம். பள்ளித் தலங்களில் கல்வியையும், ஒழுக்க பண்புகளையும் எமது தலைமுறை நிறைவாக கற்றுக் கொள்ள வழி செய்வோம்.

வீண் விரயத்தை தவிர்த்து உழைப்பினால் கிடைக்கும் ஒவ்வொரு துளி வருமானத்தையும் பக்குவமாய் பயன்படுத்துவோம். தீராத நோய்கள் அகலவும், வறுமைப்பிணி அகலவும் இந்நாளில் இறைவனை மன்றாடுவோம். சிறைக்கூடங்களில் தமிழ் மொழிக்காகவும், எம் இனத்துக்காகவும் வாழும் வயதில் வாடி நிற்பவர்கள் விடுதலை பெற்று விடிவு பெற உருக்கமாக பிரார்த்திப்போம். தைப்பொங்கல் திருநாளில் அனைவருக்கும் இதயபூர்வமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்-தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தலைவர்- சிவபூமி அறக்கட்டளை**
**உபதலைவர்- அகில இலங்கை இந்துமாமன்றம்.**

# மண் பானையில் பொங்குவோம் பொங்கலோ பொங்கல்

பன்னெடுங்காலமாக எமது வாழ்வியலுடன் ஒன்றிணைந்த பல ஆரோக்கியமிக்க நடைமுறைகள், நாகரிக ஆக்கிரமிப்பால் சிறிது சிறிதாக இன்று அற்றுப்போயுள்ளன. இயற்கையுடன் இசைவாக்கமுற்று அதன் அரவணைப்பில் வேரூன்றியிருந்த நமது நீண்டகாலப் பண்பும் மரபுகள் மட்டுமன்றி எமது ஆரோக்கியமும்கூட தொலைந்து கொண்டுள்ளன. அவற்றினை மீண்டும் எமது வாழ்வியலுடன் இசைவுறச் செய்து இயற்கை நமக்களித்திருக்கும் பல அனுகூலங்களை அனுபவிக்க விளைவோமாயின் நமது எதிர்கால சந்ததியின் வளமான எதிர்காலம் நிச்சயமாகும்.

நமது முன்னோர்களால் காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த, ஆனால் இன்று மேல் நாட்டு நாகரிக ஆதிக்கம் மற்றும் "நமது பலவீனங்களால்" எமது மிகப் பெரும்பாலான மக்களால் தற்போது கைவிடப்பட்டுள்ள ஓர் தமிழர் பழக்கத்தினை இத்தைத் திருநாளில் பதிலிடுதல் பொருத்தமாகும்.

தைப்பொங்கல் பண்டிகை நமது பழம்பெரும் பாரம்பரிய பண்டிகையாகும். "தை" திங்கள் முதல் நாளின் ஆரம்பம் தைத்திரு நாளாகக் கொண்டாட்டப்பட்டு வருகிறது. உத்தராயண காலம் தொடக்கம் என அழைப்பப்படுவதுடன் சூரியனின் நகர்வினை அடிப்படையாகக் கொண்டு "உழவர் பெருமக்களால்" உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்யும் நன்றி தெரிவிக்கும் பண்டிகையாக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பண்டைய காலங்களில் இயற்கையுடன் இசைவுற வாழ்ந்த நமது மூதாதையர்கள், தைப் பொங்கல் பண்டிகையாயினும் நாளாந்த சமையல் தேவைக் காயினும் சரி "மட்பாண்ட" உபகரணங்களையே முற்றிலும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஆனால் நாகரிகம் எனும் போர்வையில் மேலை நாட்டவர்களால் தமது பொருளாதார நலன் கருதி அறி முகப்படுத்தப்பட்ட பல்வேறு வாழ்வியல் முறை திணிப்புகளால் தற்காலத்தில் வழக்கிலிருந்து படிப்படியாக காணாமற்போகும்மட்பாண்டபாவனை நமது மரபுவழியாக பேணப்பட்ட மிகச் சிறந்த ஓர் "ஆரோக்கியத்தினை இழந்துவரும் மரபாகும்". அலுமினிய உலோகத்தாலான பல சமையலறை உபகரணங்கள் நமது நளபாகத்தின் பெரும் பகுதியினை ஆக்கிரமித்துள்ளதுடன் இதன் விளைவுகள் எமக்கும் எமது சந்ததிக்கும் ஆரோக்கியமிக்கதாக காணப்படாமை மிகவும் கவலைக்குரியது. யுத்தத்தில் கைதாகும் யுத்தக்கைதிகளுக்கு சிறைச்சாலை மற்றும் தடுப்பு முகாம்களில் உணவு பரிமாறுவதற்கு



பயன்படுத்தப்பட்டவையே இவ் அலுமினிய உலோகமாகும். இதிலுள்ள "அலுமினியம் சயனைட்" எனும் நச்சு வேதிப் பொருளானது ஒருவரது உடலுக்குள் சென்று சிறிது சிறிதாக அவரது ஆயுளை குறைக்க செய்யும் (மெல்லக் கொல்லும் நஞ்சாக செயற்படும்) இயல்புடையது.

நமது மூதாதையர்களது கண்டு பிடிப்புக்கள் மற்றும் வாழ்வியல் முறைகள் உலகின் ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் இயற்கையோடு இசைவுற இணைந்த வகையில் அதிகபட்ச ஆரோக்கிய முறைகள் மற்றும் பழக்க வழக்கங்களை முன்னிறுத்தியதாகவே அமைந்துள்ளன.

அவ் வகையில் நமது சமையல் மற்றும் உணவு தயாரிப்பில் "மட்பாண்ட பாத்திரங்களின்" பயன்பாடு மிகச் சிறந்த அறிவியலுடன் இணைந்ததாகும். மட்பாண்ட உபகரணங்கள் எவ்வித பக்க விளைவுகளுமற்ற மனிதனது நீண்ட ஆரோக்கியம் மற்றும் ஆயுளுக்கு உத்தரவாதமளிப்பனவாகும். சமைக்கும் உணவுகளில் காணப்படும் நச்சுப்பதார்த்தங்களை தன்னில் அகத்துறிஞ்சும் தன்மை வாய்ந்தன.

அத்துடன் மட்பாண்ட கைவினை தொழிலாளர்களது வாழ்வாதாரத்திற்கும் நமது பொருளாதாரம் எம்மிடையே நிலைக்கவும் காரணமாகிறது.

எரிவாயு பாவனை சற்று அதிகம் தேவைப்படும். அவ்வளவே! ஆயினும் பல சாதகமான பயன்பாடுகளைக் கொண்டுள்ள எமது இத்தகைய மரபார்ந்த வாழ்வியல் முறைகளை இயன்றளவு சிரமம் பாராது பேணுவோமாயின் ஓர் ஆரோக்கியமிக்க எதிர்கால சந்ததியினை உருவாக்க பங்களித்தவர்களாவோம்.

இந்தத் தைத்திருநாள் பண்டிகையுடன் பல ஆரோக்கியமிக்க வாழ்வியல் முறைகளுக்கு அத்திபாரமிடுவோம். "தை" முதல் நாளில் மங்கலகரமாக மண் பானையில் பொங்கலிட்டு எமது பண்பாடு,கலாசாரத்தைப் பேணி அடுத்த சந்ததியிடம் அதைக் கையளிப்போம் என உறுதி கொள்வோம்.

**ஆழ்வார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் சிறப்பு மலர் – 2022


வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



அழகிய தங்க நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்! தங்கமான உறவு இப்பொழுது புதிய பொலிவுடன்
நியூ உதயா ஜுவல்லர்ஸ்

No: 91, Power House Road,
Jaffna
Tel: 021 222 2031
newuthyajewellers@gmail.com

நியூ உதயா ஜுவல்லர்ஸ்

NEW Uthayaa JEWELLERS

(C-3532)

இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2031





வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

மயூரன்ஸ்

நகை மாளிகை

95, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2223015, 077 651 0251





S.S. மொபைல்

சந்திரலிங்கம் சறோஜினிதேவி

No: 65, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.

076 2538472/ 077 8444899

(C-3528)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப்பொங்கல் சிறப்பு மலர் – 2022

# நீதியான தீர்வைப் பெற்று வாழ வழி பிறக்கட்டும்

உலக இயக்கத்திற்கு மூல காரணமாக விளங்கும் சூரிய பகவானுக்கு நன்றி தெரிவித்து பொங்கல் திருநாளில் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

சூரிய பகவான் மகர இராசிக்கு பிரவேசிக்கும் நாளே தைப்பொங்கல் திருநாளாகும். இந்நாளில் சூரிய பகவானுக்கு பொங்கலிட்டு நன்றி தெரிவிப்பது பண்டுதொட்டு எமது மரபாகி வருகிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. இம்முதுமொழிக்கேற்ப தமிழ் மக்கள் நீண்ட வெகுநாள் விருப்புகளை எல்லாம் பெற்று ஏனைய சமூகத்தோடு சரி நிகர் சமமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும்.

பல்வேறு துன்பங்களைக் கடந்த காலத்தில் அனுபவித்த மக்களின் உரிமைக்கான குரல் வலுப்பெற்று உலக அரங்கில் கௌரவமாக வாழும் தனித்துவத்தை பெறுவதோடு பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் மனநிறைவு பெறக்கூடிய நீதியான தீர்வைப் பெற்று வாழ வழிபிறக்கட்டும்.

உலகை அச்சுறுத்தும் கொரோனாவிலிருந்து விடுபட்டு அனைவரும் சகல நலங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல ஆடல்வல்லானைப் பிரார்த்திப்போமாக.

**ஈசான சிவ சக்திகிரீவன்,**
**தலைவர்,**
**இந்து சமயப் பேரவை,**
**யாழ்ப்பாணம்.**





TKT Mark நல்லெண்ணெய்

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

No.1

4 ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழைய முறையில் மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

(C-3527)

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்...

தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்




தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

TKT கால்நடைத் தீவனம் இங்கே கிடைக்கும்

T.P: 0778328828, 0776528633, 0212255718



# நலம் தரும் சித்த ஆயுர்வேத மருத்துவம்

யாழ்ப்பாண, கேரளா சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகள், நம் நாட்டு பரம்பரை வைத்தியர்கள் உபயோகித்த சித்த ஆயுர்வேத வைத்திய முறைகள் உள்ளடங்கிய மருத்துவ சிகிச்சை செய்யப்படுகிறது.

சித்த ஆயுர்வேத மருத்துவ முறையில் அதிகூடிய தகைமையுடைய சித்த ஆயுர்வேத மருத்துவ நிபுணர்களால் சிறப்பான சிகிச்சை வழங்கப்படுகிறது.

உங்களுக்கு ஏற்படும் முதுகு தண்டுவலி, மூட்டுக்களில் ஏற்படும் வேதனை, நடக்க முடியாத நிலைமை இவற்றுக்கு இனி தீர்வு இல்லை என ஏங்கும் நோயாளிகளுக்கு சித்த மருத்துவ நிபுணர்களினால் வர்ம சிகிச்சை மூலம் 14 நாட்களுக்குள் தீர்வை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள்.

சித்த ஆயுர்வேத சத்திர சிகிச்சையில் நாட்பட்ட புண்கள், நாளப்புடைப்புகள் (வரிக்கோஸ்) மூலவியாதி, சிறுநீரகக் கற்கள், ஆணிக்கூடு, இருதய அடைப்பு என்பவற்றுக்கு சிகிச்சை பொது மருத்துவ நிபுணரால் பாரிசவாதம், சர்மநோய்கள், அஸ்மா, இருமல், தீராத தலைவலி, சோரியாசிஸ், வாதநோய்கள், நாட்பட்ட குடற்புண் (அல்சர்), மானசீக ரோகம் போன்றவற்றுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்படுகிறது.

1-3 மாதத்தில் ஏற்படும் குழந்தைகளுக்கான மூச்சு கஷ்டம், பால்குடிக்க முடியாமை, வயிறாதல், இடைவிடாத அழுகை போன்ற குழந்தைகளுக்கான கிரந்திநோய் (Birth Hypoxia) போன்ற நோய்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்படுகிறது.

இளமையில் ஏற்படும் நரை, முடி உதிர்தல், பெண்களுக்கு ஏற்படும் PCOS, இளமையில் ஏற்படும் முதுமை, முடி கொட்டல் போன்றவற்றுக்கு காயகல்ப நிபுணரினால் காயகல்ப சிகிச்சை வழங்கப்படுகிறது.

ஒருமுறை சிகிச்சை பெற்று பலனை அனுபவித்துப் பாருங்கள்

Dr.G.Sritharan BSMS (Jaf), M.Phil (Jaf), PGD in Ayurvedic Surgery (Kelany). Ad.Dip. in Human Excellence (Aliyaru) & PhD (India)
Reg No. 1093

Dr (Mrs) Anpuchelvi Sritharan BSMS (Jaf), M.D (India).
Reg. No. 10434

Dr (Ms).B.Puvithansaly BSMS (Jaf) Reg. No. 15621




விரண சிகிச்சை


பிஸ்ரியுலா சிகிச்சை


முள்ளந்தண்டு சிகிச்சை


அட்டைவிடல்


சுட்டிகை (ஆணிக்கட்டு)

**ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர், கொக்குவில்**
**65, கே.கே.எஸ் வீதி. கொக்குவில்.**
**தொ.பே. 0778201195, 0750413579**

(C-3529)

**முற்பதிவு அவசியம்**
**மாற்று மருத்துவ முறைக்காக தன்னிறைவான நிறுவனம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MS
மகா சில்க்ஸ்
இன்றைய நாகரிகத்திற்கு ஏற்ற திருமணப் பட்டுப்புடைவைகளுக்கும் றெடிமேற் ஆடைகள் அனைத்திற்கும் மகத்தான தெரிவிற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்
32, 40 A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்
T.P: 021 222 7359



பியூட்டி சில்க்ஸ்
69, 69 A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்
T.P: 021 222 7675

கவுஸ் ஒப் செலெக்ஷன்
22J, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7675

TOP SILK
ரொப் சில்க்
17A, கே.கே.எஸ். வீதி, நவீன சந்தை, மருதனார்மடம்
T.P: 021 224 3332
(C-3531)

# தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற புதிய நம்பிக்கையுடன் பொங்குவோம்



உழைக்கும் தமிழர் வாழும் உலகெங்கும் தை பிறந்ததும் முதல் நாளிலே தோரணமும் மாவிலையும் கட்டி, இயற்கைக்கு நன்றி தெரிவித்து வேளாண் நிலத்தின் நெல் விளைச்சலில் புத்தரிசியும் பசும்பாலும் கரும்புச் சாறும், சுவை தரும் முந்திரி ஏலம் முதலானவும் கலந்து பொங்கல் புதுப்பானையில் மூட்டிய தீச்சுவாலையில் கொதிக்க வைத்துப் பொங்கி வரும் போது பொங் கலோ பொங்கலென்று கூவி ஆதவனை வணங்கி பொங்கல் படைத்து கூடி நிற்கும் மக்களும் மாடும் கூடி நிற்கும் வேளை இதயம் பொங்கி மகிழ்ச்சியில் திழைத்திடும் வேளாண்மக்கள் தைப்பொங்கல் பொங்கிக் கொண்டாடுவர்.

தைப்பொங்கல் விழாவெடுக்கும் தமிழர் பண்பாட்டை நாகரிகத்தைப் போற்றினோம், மனமகிழ நினைவு கொண்டோம். ஆனால் இன்று வரப்புயர நீர் உயர நெல் உயர கோன் உயரவில்லை, குடி உயர வில்லை, விளைச்சலில்லை, செல்வம் திரளவில்லை, பசியும் பட்டினியும் உயிர்களைக் காவு கொள்ளும் கொரோனா ஊழிக் கொடுநோய் பரவலும். கோனில்லாக் குடிகளாய் உயிருக்காய் போராடும் காலமாய் மக்கள் வீழ்ந்து கிடக்கின்றனர்.

பொங்கலின்றி இதயம் பொங்காத ஏதிலிகளாய் வீழ்ந்து கிடக் கின்றோம். விடிவு தான் எப்போது என ஏங்கி நிற்கும் தமிழ்க் குலமே என்ன செய்ய நினைக்கிறாய்? தை பிறந்தால் வழிபிறக்கும் என்று புதிய நம்பிக்கை பொங்கி, தமிழர் தாயக நிலத்தில் தமிழராட்சி தழைத்திட நாமெல்லாம் ஒன்றுபட்டு, திடசங்கற்பம் கொண்டு பொங்கித்தானாக வேண்டும் என தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

**மாவை.சோ.சேனாதிராசா**
**தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி**

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
வாணி ரெக்ஸ்
Wedding Sarees &
Salwar New Collection, New Style
திருமணப் பட்டுப்புடைவைகளின் ஆலயம்





- திருமணப் பட்டுச் சாறி வகைகள்
- பூப்புனித நீராட்டு விழா சாறி வகைகள்
- பிறந்த நாள் விழாக்களுக்கான பாட்டி புறொக் மற்றும் மொடன் புறொக் வகைகள்
- அரச, தனியார் நிறுவன ஊழியர்களுக்கான ஒரே நிறத்திலான சாறி வகைகள்
- இந்தியாவில் இருந்து உடனுக்குடன் வெளிவந்த ஒன்லைன் சாறி வகைகள்
- புதிய வகை சல்வார், லெகங்கா, மஸ்தானி ஆடைவகைகள்
- ஆண்களுக்கான அனைத்துவகை ஆடைகளையும் மலிவு விலையில் பெற்றிடலாம்.

021 222 5578
021 222 9286
077 748 8093
இல.81, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(C-3530)

த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்
TS
வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்



பட்டுப் புடைவைகள், சாறி வகைகள் மற்றும் அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் நாட வேண்டிய ஒரே இடம்
21, நவீன சந்தை,
மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9965
225C, மின்சார நிலைய வீதி,
(வைத்தியசாலை பின்புறம்)
யாழ்ப்பாணம்.
021 221 5397
(C-3525)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையை கூறுபோடத் துடிக்கும் வல்லரசுகள்
# நாட்டைக் காக்க ஓரணியில் திரள்வோம்
## மக்கள் விடுதலை முன்னணி அழைப்பு

(கொழும்பு)

**நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதை தடுக்கும் வகையில் நாட்டை நேசிக்கும் சகல தரப்பினரும் முன்வந்து தமது எதிர்ப்பினை பதிவு செய்ய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.**

கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், "இலங்கையின் தேசியக் கொடியினை திருகோணமலை எண்ணெய்க் குத வளாகத்திலிருந்து அகற்றும் வேலையினை உதய கம்மன்பில செய்து வருகிறார். 50 வருடங்களுக்கு எண்ணெய்க் குதங்களின் உரிமை இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்களின் திறமையற்ற ஆட்சியினால் நாடு பாரிய சிக்கல்களை எதிர்நோக்கவுள்ளது. பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளை இவர்கள் உருவாக்கி மக்களை கடனாளிகளாக்கியுள்ளனர். இலங்கையில் இருக்கும் வழங்கலுக்கு, வேறு நாடுகளுக்கு கடன் வழங்கக் கூடிய இயலுமை காணப்படுகிறது. ஆனால் இன்று பல கோடி கடனில் தவிக்கிறது.

இலங்கையினை ஆக்கிரமிப்புச் செய்வதற்கு, இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆகவே எண்ணெய்க் குத வளாகத்தை மீட்டெடுப்பதற்கு மதத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தேசப் பற்றுள்ள மக்கள், என சகல தரப்பினரும் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பினை முன்வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம்" என அவர் தெரிவித்தார். (நி-5)

## மின்தடையை சீராக்க சீன நிபுணர் வருகை

(கொழும்பு)

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின்நிலையத்தில் பழுதடைந்துள்ள ஜெனரேட்டரை ஆய்வு செய்வதற்காக சீனாவில் இருந்து நிபுணர் ஒருவர் இலங்கை வரவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஜெனரேட்டரை விரைவில் சீர்செய்து 300 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் சேர்ப்பதற்கு நம்பிக்கை உள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனையடுத்து. மின்சார விநியோகம் தொடர்பிலான தற்போதைய நிலைமை ஓரளவுக்கு தீர்க்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் மக்களுக்கு உள்ளது
### தேசிய மக்கள் சக்தி



(கொழும்பு)

நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பதில் சந்தேகம் வேண்டாம். மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் மக்களுக்கு உள்ளது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பண்டாரகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், நாட்டின் ஆட்சியை மாற்றுவதற்கு நாட்டு மக்கள் தயக்கம் காட்டுவதாகவும் தெரிவித்தார். (நி-5)

## இந்தியாவிடம் 73 ஆயிரம் கோடி ரூபாய் கடன் கோரும் இலங்கை

(கொழும்பு)

கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் இலங்கை இந்தியாவிடம் 73 ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவியை கோரத் திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், சரக்கு இறக்குமதி செய்ய இந்தியாவிடம் ஒரு பில்லியன் டொலர் கடன் உதவி பெற பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்




திரு. நல்லதம்பி சிவநேசர் (அதிபர் - தரம் I)

(அதிபர்,கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

சேவை நிலையங்கள்

12.11.1984-20.08.1989 குளி/திவறும் பொல காசீம் வித்தியாலயம்
29.08.1989-11.10.1989 ஆசிரியர், கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்
12.10.1989-21.10.1997 ஆசிரியர், கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்
22.10.1997-31.07.1998 ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்
01.08.1998-30.11.2005 ஆசிரிய ஆலோசகர், சமூகக்கல்வி,வலயக்கல்வி அலுவலகம் ,கிளிநொச்சி
01.12.2005-12.01.2014 அதிபர், கிளி/ பரந்தன் இ.ம.வி
13.01.2014-05.10.2017 பிரதி அதிபர், கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை
06.10.2017-13.01.2022 அதிபர்,கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை

கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை அதிபராக பணியாற்றி இன்று மணிவிழா காணும் அதிபர் திரு.நல்லதம்பி சிவநேசர் அவர்களுடைய ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்

அதிபர்கள் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.

(C-3522)

## உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

கித்துல்கல மற்றும் ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நான்கு துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பிரதேச செயலர் உயர்திரு
**சண்முகராசா சிவஸ்ரீ**
அவர்களுக்கு வழங்கப்பட்ட
**'நேர்மைக்கு மகுடம் விருது'**
கடமையே கண்ணாய் இருந்து
கடுமையாய் உழைத்தீரே
அதற்கான பலனை
நாடறிய பெற்றீரே
வலி.வடக்கு மக்களின்
வலியை நன்கு அறிவீரே
தமது ஆளுமையைப்
பல்துறையிலும் பரப்பினீரே
பலரும் கவரும்
நற்பணி ஆற்றினீரே
எமது வாழ்த்துக்களும்
பாராட்டுக்களும் உரித்தாகட்டுமே

(9654)

செயலாளர்,
பிரதேச மட்ட முதியோர் சங்கம்,
வலி.வடக்கு, தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

David Pieris
Group of Companies



# இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

உலகெங்கும் வாழும் உழவர்க்கு என்றும் உடனிருந்து உயிர் வளர்க்கும் ஆதவனைப் போற்றும் இந்நன்னாளில் கடந்த 5 தசாப்தங்களாக இலங்கை முழுவதும் தன் கிளைகளை பரப்பி, 2000 த்திற்கும் அதிகமான சேவை வழங்குநர்களை தன்னிடத்தே கொண்ட ஒரே ஒரு நிறுவனம், பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், மற்றும் நான்கு சக்கர வண்டிகளை வாங்க, விற்க, பரிமாற்றம் செய்ய, லீசிங், நிதிசார் சேவைகள், காப்புறுதி, பொழுதுபோக்கு வாகனங்கள், வாகன உதிரிப் பாகங்கள், விவசாய உற்பத்தி பொருட்கள் உட்பட்ட பல்வேறுபட்ட துறைகளிலும் சிறந்த சேவைகளை உங்களுக்கு வழங்கி வரும் டேவிட் பீரிஸ் குழுமம் மகிழ்ச்சியும் சௌபாக்யமும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கமைய எல்லோரினது வாழ்வும் சிறக்கட்டும் !

டேவிட் பீரிஸ் குழுமத்தின் தைப்பொங்கல் பரிசை வென்றிட இக் கூப்பனை அல்லது பிரதி செய்து நிரப்பி 23-01-2022 இற்கு முன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 5 கிளைகளுள் ஒன்றில் ஒப்படைக்கவும்.
ஜனவரி 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை காலை 10:00 மணி முதல் மாலை 7:00 மணி வரை முத்தைவெளி மைதானத்தில் உள்ள எமது JITF 2022 ஸ்டாலிலும் இக்கூப்பனை பெற்றுக்கொள்ளலாம்.

பெயர் ..................

தேசிய அடையாள அட்டை இலக்கம் .................. தொலைபேசி இலக்கம் ..................

விலாசம் ..................

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட். இலக்கம் 61, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடட்.
A-9 வீதி கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. 193B, ஸ்டேசன் வீதி, வவுனியா, கடற்கரை வீதி, முல்லைத்தீவு, இல 37, தாழ்வுபாடு வீதி, மன்னார்

BAJAJ GENUINE PARTS & SERVICE | ASSETLINE | WORKSHOP | D P LOGISTICS | D P GLOBAL VENTURES (PRIVATE) LIMITED



# இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்



மகிழ்ச்சியும் செல்வமும்
என்றும் நிறைவாய்ப் பொங்கிடட்டும்

COMMERCIAL BANK
உங்கள் நலனே எங்கள் நோக்கம்

(C-1580)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நம்பிக்கைத் துரோகம்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் ஒரு அரசர் இருந்தார்.

அவர் மன்னருக்கே உரிய நெறிமுறைகளுக்குட்பட்டு, மக்கள் நலம் பேணும் வகையில் நல்லாட்சி நடத்தி வந்தார்.

அம்மன்னருக்கு வாய்த்த மந்திரி, எல்லா விடயங்களிலும் மன்னருக்கு அனுசரணையாக இருந்து வந்தான்.

அதனால், மந்திரி யின் மீது மன்னருக்கு அளவு கடந்த நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. நாட்கள் கடந்தன.

ஒருநாள்...! ராஜகுரு மன்னரைச் சந்திப்பதற்காக அரண்மனைக்கு வந்தார். ராஜ்குருவை மிகவும் மரியாதையு டன் வரவேற்று, இருக்கையில் அமர வைத்தார் மன்னர்.

ராஜகுரு மன்னரைப் பார்த்து, "மன்னா! நான் சொல்லப் போகும் செய்தி தங்கள் மனதைச் சஞ்சலம் அடையச் செய்வதாக இருக்கும்.

அதனால்தான், அதை எப்படிச் சொல்வதென்று தயங்குகிறேன். ஆனால், சொல்லாமல் என்னால் இருக்கவும் முடியாது..." என்று பேச்சை இழுத்தார் ராஜகுரு.

"ராஜகுருவே! என்ன செய்தியாக இருந்தாலும் சொல்லுங்கள். தயக்கம் வேண்டாம்," என்று கூறினார் மன்னர்.

"மன்னா! நேற்றைய இரவில் நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில், உங்களது தம்பி யும் இன்னும் சிலரும் கூடி, உங்களைக்கொன்று விட்டு ஆட்சியைப் பிடிப்பதாகக் காட்சி தோன்றியது.

என் கனவு பலிக்கும் தன்மை கொண்டது மன்னா! அதனால், தாங்கள் எதற்கும் உஷாராக இருப்பது நல்லது. இதைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று எண்ணியே இங்கு வந்தேன்," என்று கூறினார் ராஜகுரு.



ராஜகுரு, மன்னரை மீண்டும் வணங்கி விடை பெற்றுச் சென்று விட்டார். மன்னர் தனிமையில் அமர்ந்து சிந்திக்கத் தொடங்கினார்.

ராஜ குருவின் கனவுக் காட்சியில் உண்மை இருப்பதாகவே, மன்னரின் மனதிற்குப்பட்டது.

அடுத்த நாள் காலை...! மன்னர், மந்திரியை அழைத்து, அவரிடம் நேரில், தனது தம்பியின் போக்கு குறித்துப் பேசினார்.

"மந்திரியாரே! உங்கள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள்! எனவே, உங்களை நம்பி ஒரு பரம ரகசியத்தை உங்களிடம் சொல்லப் போகிறேன். அதனை யாரிடமும் சொல்லாமல், நான் சொல்லப்போகும் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும்," என்று கூறினார் மன்னர்.

"என்ன விடயம் மன்னா? சொல்லுங் கள்! உங்கள் மீதுள்ள எனது விசுவாசத்தின் பொருட்டு, தாங்கள் சொல்லும் காரியத்தைச் செய்து முடிக்கிறேன்" என்று கூறினார் மந்திரி.

"மந்திரியாரே! அண்மைக் காலமாக, எனது தம்பியின் மீது ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அவன் என்னைக் கொன்று விட்டு, அரியணை ஏறுவதற்குச் சதி செய்து வருவதாக எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. நீர் அவனிடம் நேரில் சாதுரியமாகப் பேசி, அவனது சதி முயற்சியைத் தடுக்க வேண்டும்," என்று மன்னர் கேட்டுக் கொண்டார்.

(தொடரும்)

# மகாபாரதம்

303

### பீஷ்மர் மறைந்தார்



நல்ல பல அறிவுரைகளைக் கதைகள் மூலம் சொல்லி வந்த கங்கை மைந்தன் களைப்புற்றார். பேச்சை நிறுத்தினார். யோகத்தில் ஆழ்ந்தார். தியானத்தில் இருக்கையிலேயே அவரின் உடலில் இருந்த அம்புகள் உதிர்ந்தன.

அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அனைத்து அம்புகளும் காணாமற் போயின. அவரது உயிர் சுவர்க்கத்தை நோக்கிச் செல்லலாயிற்று. அது கண்ட கண்ணனும் வியாசரும் வியப்புற்றனர்.

தேவ துந்துபிகள் முழங்கின. வானம் மலர் மாரி பொழிந்தது. சித்தர்களும், பிரம ரிஷிகளும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினர். "பிதாமகரே! வருக...என வானுலகோர் வரவேற்றனர்.

பெரிய அக்கினி சுவாலை போன்றதோர் ஒளிப்பிழம்பு கங்கை மைந்தரின் தலையிலிருந்து புறப்பட்டு விண்ணுலகைச் சென்றடைந்தது. பீஷ்மர் இவ்வாறு வசுலோகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

பாண்டவர்களும் விதுரரும் யுயுத்சுவும் சந்தனக் கட்டைகளாலும் மேலும் பல வாசனைப் பொருள்களாலும் சிதை அமைத்தனர். திருதராட்டிரனும் தருமரும் பிதாமகனின் உடலைப் பட்டுக்களாலும் மாலைகளாலும் போர்த்தி மூடினர்.

யுயுத்சு குடை பிடித்தான். பீமனும், அருச்சுனனும் சாமரங்கள் ஏந்தினர். நகுல, சகாதேவர்கள் மகுடம் வைத்தனர்.

திருதராட்டினனும், தருமரும் காலருகே நின்றனர். குருவம்சத்து மாதர்கள் நாற்புறமும் விசிறி கொண்டு வீசினர்.

ஈமச்சடங்குகள் சாத்திரப்படி நிறைவேறின. புண்ணியமூர்த்தியின் சிதைக்குத் தீயிடப்பட்டது. அனைவரும் வலம் வந்து தொழுதனர். எங்கும் சாந்தி நிலவியது.

பின்னர் கண்ணனும், நாரதரும் ,வியாசரும், பாண்டவரும், பரதவம்சத்து பெண்டிரும், நகரமாந்தரும் புண்ணிய நதியான கங்கைக்கரையை அடைந்தனர். ஜலதர்ப்பணம் செய்யப்பட்டது.

அப்போது கங்கா தேவி நீரிலிருந்து எழுந்து வந்து அழுது புலம்பியபடியே..."நான்சொல்வதைக் கேளுங்கள். என் மகன் குலப்பெருமை மிக்கவன்.

ஒழுக்கத்தில் சிறந்தவன். பரத வம்சத்து பெரியோர்களிடம் பெருமதிப்புடையவன். உலகோர் வியக்கத்தக்க விரதத்தை மேற்கொண்டவன்.

பரசுராமராலும் வெல்ல முடியா பராக்கிரம் உடையவன். காசி மாநகரில் நடைபெற்ற சுயம்வரத்தில் தனியொரு தேராளியாக இருந்து, மன்னர்களை வென்று மூன்று கன்னிகைகளைக் கொண்டு வந்தவன். வீரத்தில் இவனுக்கு நிகராக உலகில் வேறு யாருமில்லை.

அத்தகைய மாவீரன் சிகண்டியினால் கொல்லப்பட்டதை எண்ணுகையில் என் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது" என்றாள்.

அப்போது கண்ணன் "தேவி துயரப்படாதே..தைரியத்தை இழக்காதே..உன் மைந்தன் மேலுலகம் சென்றடைந்தார். இனி அவர் வசுவாக இருப்பார். ஒரு சாபத்தினால் மானிட வடிவம் தாங்கி மண்ணுலகில் உனக்கு மகனாகப் பிறந்தார் என்பதை நீ அறிவாய்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுப்பூசியை துரிதப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பொதுமக்கள் காட்டும் தயக்கத்தை கருத்திற்கொண்டு தடுப்பூசிகளை துரிதப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

அதன்படி, ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பகுதியிலும் மூன்று கூடுதல் தடுப்பூசி மையங்கள் அமைக்கப்படும் என்றும் அது தவிர, மக்கள் தடுப்பூசியைப் பெறுவதற்கு வசதியாக, அனைத்து மருத்துவமனைகளும் தங்கள் தடுப்பூசி மையங்களை இரவு 8 மணி வரை திறந்திருக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## அடுத்த ஜனாதிபதி சஜித் அடித்துக் கூறுகின்றார் திஸ்ஸ

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி சஜித் பிரேமதாஸவே. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை." என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன அல்லது ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராகுவதற்கான சாத்தியம் உள்ளது எனக் கூறப்படுகின்றதே என ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு, "சஜித் பிரேமதாஸவே எமது எதிர்க்கட்சித் தலைவர். நாம்தான் தற்போதைய பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சி.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவியைச் சவாலுக்குட்படுத்த முடியாது.

அடுத்த ஜனாதிபதியும் அவர் தான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை" - என்று அவர் பதிலளித்தார். (நி-5)

## புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் பணிப்பகிஷ்கரிப்பு 200 புகையிரத சேவைகள் ரத்து

(கொழும்பு)

இலங்கை புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தினர் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக 200 புகையிரத சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என இலங்கை ரயில்வே சேவையின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

புகையிரத பயண கால அட்டவணையை நடைமுறைப்படுத்தாமை, ரயில்வே ஊழியர்களை முறையாக நிர்வாகம் செய்ய தவறியமை உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து பெலியத்த, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைக்கு நீண்ட தூர பயணங்களை ஆரம்பிக்கவுள்ளதாக இந்த வார தொடக்கத்தில் நிர்வாகம் அறிவித்து பயணச்சீட்டுகளை வழங்கியதாகவும், ஆனால் நேற்று முன்தினம் புகையிரத பயணங்களை இரத்து செய்ததாகவும் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான சம்பவங்களினால் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்தே இலங்கை புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தினர் நேற்று நள்ளிரவு முதல் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்தனர். (நி-5)

## புனித அல்குரானை சிறையில் வைத்திருக்க அனுமதி மறுப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சில பிரதிவாதிகளுக்கு, சிறைச்சாலைக்குள் புனித அல்குர் ஆனை பயன்படுத்துவதற்கும் சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதி மறுப்பதாக நீதிமன்றில் முறையிடப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் 25 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்துள்ள வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போதே இந்த விடயம் விஷேட ட்ரயல் அட்பார் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. (நி-5)

## வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

### எதிரிகளை வெல்லும் வரம் தரும் நரசிம்மர்



பிரகலாதன் கரம் குவித்து வணங்கி ஓம் நமோ நாராயணா என்றான். சீறிவந்த நாகம் பிரகலாதனை மும்முறை வலம் வந்து பிரகலாதன் பாதத்தில் தலைவைத்து விட்டது.

இரண்யகசிபுவின் கோபம் பன்மடங்காக அதிகரித்தது. முரட்டு யானையை விட்டு காலால் மிதிக்க சொல்லி உத்தரவிட்டான்.

யானை பிரகலாதனை நோக்கி வந்தது. பிரகலாதன் நாராயன மந்திரத்தை உச்சரிக்கவும் யானை பிரகலாதன் முன் மண்டியிட்டு வணங்கியது. இதைப்பார்த்தும் இரண்யகசிபுவின் கோபம் அடங்கவில்லை.

மனைவியிடம் நஞ்சு நிறைந்த கோப்பையைக் கொடுத்து, அதை பிரகலாதனிடம் பருகும்படி ஆணையிட்டான். தாயின் வேதனையை கண்ட பிரகலாதன் கோப்பையை வாங்கி நாராயணன் நாமத்தை உச்சரித்துவிட்டு அருந்தினான். அது அவனை ஒன்றும் செய்யவில்லை. இரண்யகசிபு மனம் மாறவில்லை.

பிரகலாதனிடம் 'மூடனே, உனக்கு யார் கொடுத்த தைரியம்? மூவுலகிலும் என்னை விட மேலானவன் யார் இருக்கிறார்கள்' என்று கேட்டான்.

அதற்கு 'முத்தொழிலையும் செய்யும் பரந்தாமனே காரணம்' என்றான்.

'அவன் எங்கு இருக்கிறான்?' என்று ஆத்திரமாக கேட்டான்.'அவர் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார்' என்று அமைதியாக பிரகலாதன் கூற, 'இந்த தூணிலும் இருப்பாரா?, காட்டு பார்க்கலாம்' என்று கையில் வாளுடன் சென்று தூணை வாளால் வெட்டினான். அப்போது அதிசயம் நடந்தது.தூண் இரண்டாக பிளந்து அதற்குள் இருந்து பயங்கர சத்தத்துடன் நரசிம்மர் தோன்றினார்.

விலங்காகவும் இல்லை, மனிதனாகவும் இல்லை. தலைசிங்கமாகவும், உடல் மனிதனாகவும் இருந்தது.நரசிம்மர் பிடரிமயிர்கள் குலுங்க கர்ஜித்தார். அவரது வாயில் கோரைப்பற்களும், கைகளில் நீண்ட கூர்மையான கரங்களும் இருந்தன.

இரண்யகசிபு வாளால் நரசிம்மரை வெட்ட ஓங்க, அதை தட்டிவிட்ட நரசிம்மர் மாலை நேரம் வரும்வரை அவனுடன் மல்யுத்தத்தில் ஈடுபட்டார்.

அந்திப்பொழுது நெருங்கவும் இரண்ய கசிபுவை தூக்கிக் கொண்டு நிலைப்படிக்கு வந்து, தனது நகங்களால் அவனது வயிற்றை குத்தி அவன் உடலை கிழித்தார். இரண்யகசிபு மடிந்தான்.

இதைக் கண்ட தேவர்கள் மகிழ்ச்சி அடைந்து மலர்மாலை பொழிந்தனர். நரசிம்மர் மகிழ்ச்சியடைந்து பிரகலாதனை வாழ்த்தி உனக்கு வேண்டிய வரங்களை கேள் என்றார்.

(தொடரும்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 600 | 600 | 450 |
| தக்காளி | 140 | 180 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 | 50 |
| கோவா | 250 | 250 | 250 | 300 |
| கரட் | 300 | 420 | 450 | 480 |
| பூசணி | 80 | 100 | 80 | 120 |
| புடோல் | 200 | 200 | 200 | 320 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 240 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 350 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 260 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 100 | 120 |
| பயற்றங்காய் | 350 | 350 | 700 | 400 |
| லீக்ஸ் | 320 | 260 | 250 | 400 |
| பீற்றூட் | — | 320 | - | 450 |
| கறிமிளகாய் | 400 | 500 | 600 | 600 |
| முருங்கைக்காய் | — | - | 1000 | - |
| போஞ்சி | 300 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | - | 300 |
| கீரை – 1 பிடி | 80 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 280 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 450 | 500 |
| முள்ளங்கி | 140 | 80 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 40 |
| ஈரப்பலா | 100 | 90 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்.
– திருமந்திரம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தைப்பொங்கல் திருநாளின் அகப் பொருளும் புறப் பொருளும்

இன்று தைப்பொங்கல் திருநாள். சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துகின்ற திருநாளாகத் தைப்பொங்கல் அமைகிறது.

நிலத்தை உழுது பண்படுத்தி தானியங்களை விளைவித்து, உலகை வாழவைக்கும் விவசாயப் பெருமக்கள் தங்கள் வேளாண்மைக்கு உதவி செய்த சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

சூரிய பகவானுக்கு நன்றி பகர்ந்து பொங்கிப் படைக்கின்ற இப்பெரும் பண்பாட்டை தைத் திங்களின் பிறப்போடு ஒன்றித்து வைத்தது எதற்காக? என்று ஆராயும் போதுதான் எம் முன்னவர்களின் உன்னதம் உணரப்படும்.

ஆம், மனிதர்களுக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள். ஆக, 24 மணித்தியாலங்கள் கொண்ட ஒரு நாள் என்ற மண்ணுலகக் கணிப்பில் 12 மணித்தியாலங்கள் பகலும் 12 மணித்தியாலங்கள் இரவுமாக அமைகின்றன.

இதுபோல விண்ணுலகில், எங்களின் ஒரு வருடம் தேவர்களின் ஒரு நாள் என்ற அடிப்படையில், ஆறு மாதம் பகற்பொழுதும் ஆறு மாதம் இரவுப்பொழுதுமாக அமையும்.

அந்த வகையில், இன்று தைத் திங்கள் முதலாம் நாள் தேவலோகத்தில் விடியல் பொழுது ஆரம்பமாகின்றது.

தேவலோகத்துப் பகற்பொழுதை உத்தராயண காலம் என்றழைப்பர்.

இஃது தைத் திங்கள் முதலாம் நாள் தொடக்கம் ஆனி மாதம் 32 ஆம் நாள் வரையான ஆறு மாத காலப் பகுதியினைக் குறிக்கும்.

இதேபோல ஆடித் திங்கள் முதலாம் நாள் தேவர் உலகில் இராப்பொழுது ஆரம்பமாகின்றது.

இந்த இராப்பொழுது ஆடி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 29 ஆம் திகதி வரையான கால எல்லையாகும்.

இஃது தட்சணாயன காலம் என்று அழைக்கப்படும்.

இதனை இன்னொரு வகையிலும் பொருள் படுத்தலாம். அதாவது தைத் திங்கள் முதல் நாள் தொடக்கம் ஆனித் திங்கள் 32 ஆம் நாள் ஈறான உத்தராயண காலத்தில்; சூரியன் கிழக்கில் இருந்து வடக்குத் திசையால் மேற்றிசை செல்லுகின்ற ஒழுங்கும் தட்சணாயன காலத்தில் சூரியன் கிழக்கில் இருந்து தென்திசை வழியாக மேற்குத் திசைக்குச் செல்லுகின்ற ஒழுங்கும் அமையுமென்ற கணிப்பும் உண்டு.

ஆக, தைத் திங்கள் தேவலோகத்தின் பகற்பொழுது ஆரம்பம் என்பதும் தேவலோகத்தின் பகற்பொழுதானது இப் பூவுலகில் மறுமையடைந்த மானிடர்களின் உய்திக்கு உகந்த காலம் என்பதால், அந்தக் காலத்தைத் தந்தருள்கின்ற சூரிய பகவானுக்கு தைத் திங்கள் முதலாம் நாளில் பொங்கிப் படைத்து அவனை வரவேற்று நன்றி கூறுகின்ற பண்புடைமையும் உண்டென்பதை இங்கு உரைத்து நிற்பது பொருத்தமே.

ஆக தைப்பொங்கல் திருநாள் எங்கள் தமிழர் வாழ்வில் உயர்வையும் ஏற்றத்தையும் தரட்டும்.

# 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக மக்களை அணி திரட்ட முடிவு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்த முற்படும் மிகப் பெரிய சதி நடவடிக்கைக்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுமக்களை அணிதிரட்ட முடிவெடுத்திருப்பதாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தத்திற்கும், தமிழ்மக்களின் தீர்வுக்கும் இடையில் ஒரு தொடர்புமில்லை எனவும், 13 ஆவது திருத்தச் சட்டத்திற்குள் தமிழ் மக்களின் தீர்வை முடக்குவதான முயற்சிகள் இடம்பெறுவதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய் எனவும் விக்கினேஸ்வரன் ஐயா ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் வேண்டுமானால் இவ்வாறான கருத்துக்களைக் கூறலாம். ஆனால், இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வென்ற பெயரில்தான் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் பெயரில் தான் இலங்கை 13 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தது.

அது தீர்வாகத்தான் இதுவரை கருதப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு நிலையில் இலங்கையில் அரசியலமைப்பை நான்காவது தடவையாகக் கொண்டு வருகின்றபோது அந்த 13 ஆவது திருத்தத்தை தமிழ் அரசியல் கட்சிகள் நடைமுறைப்படுத்தச் சொல்லிக் கேட்பது அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டதாகக் காட்டி இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டதாக உலகத்திற்கு ஒரு செய்தியைக் கொடுப்பதற்காகத்தான் இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

18 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது வட- கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில் அவர்களில் அரச முகவர்கள் 5 பேரும், இந்திய முகவர்கள் 11 பேரும் இணைந்து 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் செயற்படுகிறார்கள்.

இவர்களின் சதி நடவடிக்கையை ஏதாவதொரு வழிமுறையில் நாங்கள் தடுக்காவிட்டால் தமிழ்மக்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும், ஒற்றையாட்சிக் கட்டமைப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற நிலை நிச்சயம் உருவாகும். எனவே, இதற்கு எதிராகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பொதுமக்களை அணிதிரட்ட முடிவெடுத்திருக்கின்றது.

அந்த வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு போராட்டமும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம் என்றார். (ம-18.33)

## பேருந்து விபத்து

# 13 தொழிற்சாலை ஊழியர்கள் காயம்

(வவுனியா)

வவுனியா திருகோணமலை வீதி கெபித்திகொல்லாவ பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 13 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்களை ஏற்றிச்சென்ற இரண்டு பஸ்கள் டிப்பர் வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் 12ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் பேருந்தின் சாரதி ஆகியோர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம -299)

## ரயில் சேவை இரத்தானதால்

# புகையிரத பெட்டிகள் அடித்து சேதமாக்கப்பட்டன

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த மீனகயா புகையிரதத்தின் மீது நேற்று பிற்பகல் 12.00 மணியளவில் கெக்கிராவ பகுதியில் வைத்து பயணிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கெக்கிராவ புகையிரத நிலையத்தில் இருந்து புகையிரதம் மீண்டும் சேவையில் ஈடுபடாமையினால் ஆத்திரமடைந்த பயணிகள் புகையிரத பெட்டிகளை அடித்து சேதப்படுத்தியுள்ளனர். (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மாதகல், ஜம்புகோளப்பட்டினம் ஓய்வு விடுதி, சில்லாலை முதியோர் இல்லம், மாதகல் அந்தோனியார் கோயிலடி, அரசடி, வடலியடைப்பு, இடும்பன், ஜம்புகோளப் பட்டினம், காஞ்சிபுரம், மாதகல், காட்டுப்புலம், கள்ளவேம்படி, குசுமாந்துறை, மாதகல் இறங்குதுறை, சாந்தை சத்தியகாடு, சில்லாலை, வடலியடைப்பு சித்தங்கேணி, வைரவர் கோவிலடி சுழிபுரம், தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோவிலடி, நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர்வழங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணை சந்தி, சுருவில்- ஊர்காவற்றுறை, கெருடாவில், மயிலியதனை, பொக்கணை, சிதம்பரா கல்லூரி, தொண்டைமானாறு, உடுப்பிட்டி நூலகம், வல்லை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமரசங்குளம் மாதா கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நெருடலை உணருங்கள்

ஒரு தவறைத் தவறு என்று எப்படித் தெரிந்து கொள்வது? என்ற கேள்விக்கு ஸ்ரீஸ்ரீ பதில் கூறினார்.

தவறு என்பது நெருடலைத் தரும். நெருடலைத் தராதது தவறாக இருக்க முடியாது. அந்த நெருடல் மெய்யுணர்வைத் தொந்தரவு செய்யும்; செய்த தவறை மீண்டும் செய்யாதபடி தடுத்துவிடும். எனவே நெருடலோடு இருங்கள்; கற்ற உணர்வோடு அல்ல. இது ஒரு மிக நுண்ணிய [illegible] ஆகும்.

கற்ற உணர்வுக்கும் நெருடலுக்குமுள்ள வேறுபாடு என்ன? (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஒரு பொருளை கண்ணை ஒட்டி வைத்தாலும் தெரியாது. அதுபோலவே மிகத் தொலைவில் உள்ள பொருளும் தெரியாது. மிக நெருங்கிய பொருளும் தெரியாது.

திரைக்கு அப்பாலுள்ள பொருளும் தெரியாது.

பெரிய பொருளின் அருகில் சிறிய பொருள் தெரியாது. சூரியன் முன் நட்சத்திரம் தெரியாது.

பாலில் கரைந்த சர்க்கரையும் அப்பில் கரைந்த உப்பும் தெரியாது. ஒருவனிடமுள்ள அன்பு, அறிவு இவைகள் தெரியமாட்டா. இவை செயற்படும் போது மட்டும் உணரமுடியும். இதுபோல் கடவுள் மெய்யுணர்வுக்கு மட்டும் புலனாவார். உணர்ந்தவரும் இத்தன்மையால் உரைக்கமாட்டாமல் திகைப்பார்கள்

"உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்" என்பார் சோழ நாட்டு முதலமைச்சராகிய சேக்கிழார் பெருமான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

52

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



ஒரு மொழியின் எல்லா எழுத்துகளுக்கும் குறியீடுகளுக்கும், வரி வடிவ அமைப்பில் ஒரு சீர்மை இருக்கும். எனவே எண்களும் சில வேளைகளில் எழுத்துகளைப் போலத் தோற்றம் அளிக்கும். அது போலவே தமிழில் உள்ள சில எண்களும், எழுத்துகள் போலவே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக அட்டவணை 2 A ஐப் பார்க்க:

அட்டவணை 2 A

| எண் | எழுத்து |
|---|---|
| க (ஒன்று) | க (ககரம்) |
| உ (இரண்டு) | உ (உகரம்) |
| ரு (ஐந்து) | ரு (ரு-கரம்) |
| எ (ஏழு) | எ (எகரம்) |
| அ (எட்டு) | அ (அகரம்) |

பண்டைய தமிழர்கள் தமிழில் பயன்படுத்திய எண்கள் தாம் தமிழ் எண்கள். அப்படி என்றால் இப்பொழுது பயன்படுத்தி வரும் 1,2,3 முதலான வரிசை எண்கள் தமிழ் இல்லையா? அவை தமிழ் எண்களில் இருந்து உருவானவை என்று கூறப்பட்டாலும், அவை அரபி எண்கள் என்று சொல்லப்படுவதோடு உலக எண்களாக மாறி விட்டன.

நாம் முன்னர் பார்த்தோம் பிற மொழியினர் தத்தம் மொழி எண்களைப் பயன்படுத்துவதை. நாம் மட்டும் தமிழ் எண்களை விலக்கி வைத்து விட்டோம். எம்மில் பலருக்கு அவ்வாறு எண்கள் உள்ளனவா என்பது கூடத் தெரியாது. நாம் இக்கட்டுரை மூலம் நம் எண்களை நாம் அறிவோம்!

தமிழ் எண்களைக் குறிப்பிடும் பாடல்கள் தமிழில் உள்ளன. அவற்றுள் பலராலும் எடுத்துக் காட்டாகக் கூறப்படுவது கம்பர் கால ஔவையார் பாடிய பாடல் ஒன்று. அப்பாடல் 'எட்டேகால் இலட்சணமே', எனத் தொடங்கும்.

தமிழில் எட்டு என்பதை 'அ' என்னும் எழுத்தாலும் கால் என்பதை 'வ' என்னும் எழுத்தாலும் குறிப்பர். எனவே எட்டே கால் இலட்சணம் என்றால் அவலட்சணம் என்றாகிறது. பாடல்களில் மட்டுமல்ல அன்றாடப் பயன்பாடுகளிலும் தமிழ் எண்களே பயன்படுத்தப்பட்டு வந்தன. தமிழ் எண்களை அட்டவ்ணை - 3 இல் தரப்பட்டுள்ளது.

**தமிழ் எண்களைக் குறிப்பிடும் பாடல்கள் தமிழில் உள்ளன. அவற்றுள் பலராலும் எடுத்துக் காட்டாகக் கூறப்படுவது கம்பர் கால ஔவையார் பாடிய பாடல் ஒன்று. அப்பாடல் 'எட்டேகால் இலட்சணமே', எனத் தொடங்கும். தமிழில் எட்டு என்பதை 'அ' என்னும் எழுத்தாலும் கால் என்பதை 'வ' என்னும் எழுத்தாலும் குறிப்பர். எனவே எட்டே கால் இலட்சணம் என்றால் அவலட்சணம் என்றாகிறது.**

அட்டவணையில் உள்ள தமிழ் எண்கள் தவிர்ந்த மற்றைய தமிழ் எண்கள் எவ்வாறு எழுதப்படுகிறது என்பதைப் பார்ப்போமானால் ௨௰= 20 (இரண்டு- பத்து) ஐயும் ௩௰௮ = 38 (மூன்று-பத்து-எட்டு) ஐயும் குறிக்கின்றது. இரண்டாயிரத்து நானூற்றி ஐம்பத்தி மூன்று (2453) என்பது ௨௲௪௱௫௰௩ என எழுதப்பட்டது. அதாவது, இரண்டு ஆயிரம் நான்கு-நூறு-ஐந்து-பத்து-மூன்று(௨ - ௲ - ௪ - ௱ - ௫ - ௰ - ௩) இங்கு என்பது ௲ ஆயிரத்தையும் ௱ என்பது நூறையும் குறிக்கும் தமிழ் எண்களாகும். இதுபோலவே எடுத்துக்காட்டாக ௰௧ (11), ௰௯ (19), ௨௰ (20), ௨௰௧ (21), ௯௰௯ (99), ௱௧ (101), ௯௱ (900), (1000), ௲௱ (1100), ௲௯௱ (19,00), ௨௲ (2000), ௯ (9,000), ௲ (10,000), ௱௲ (100,000), ௱௱௲ (100,00,000) எழுதப்பட்டது.

**அட்டவணை - 3**

| | | |
|---|---|---|
| ௧ 1 | ௪ 4 | ௭ 7 |
| ௨ 2 | ௫ 5 | ௮ 8 |
| ௩ 3 | ௬ 6 | ௯ 9 |
| | | ௰ 10 |

௲ =1000 ௱ =100

தொடக்கத்தில் தமிழ் எண்கள் இடம் சார்ந்த முறையில் (Positional System) எழுதப் பயன்படுத்தப்படவில்லை. 10, 100, 1000 ஆகியவற்றுக்குத் தனித்தனி குறியீடுகள் இருப்பதைக் கொண்டு இதை அறியலாம். தமிழ் எண்கள் எழுத்தால் எழுதப்படும் எண்களைச் சுருக்குவதற்கான குறியீட்டு முறையாகவே (Abbreviational System) ப்பயன்படுத்தப்பட்டது.

சுழியம் (0) அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் தான் தமிழ் எண்கள் இடம் சார்ந்த முறையில் (அதாவது பத்தாம் இடம், நூறாம் இடம்...) எழுத ஆரம்பிக்கப்பட்டது. தற்கால புதிய முறைப்படி, இவ்வெண் (2453) என்பது என எழுதப்படுகிறது. ஆரம்பத்தில் பின்னவடிவங்களை குறிக்கவும் தமிழ் குறியீடுகள் இருந்தன. உதாரணமாக கால் (1/4) ஐக்குறிக்க "வ" குறியீடும், அரையைக் (1/2) குறிக்க "இ" குறியீடும் இருந்தன (இதை படம் a இல் காணலாம்). பின்னவடிவங்களை குறிக்கும் குறியீடுகள் தற்போது வழக்கில் இல்லை.

தமிழ் எண்கள்

கடுகு, உழுந்து, ஙனைச்சு
சமைச்சு, ருசிச்சு, சாப்பிட்டேன்
என அவன் கூறினான் ஓ என்றேன்.

தமிழ் எண்களை நினைவில் கொள்ள ஒரு வழி

**தொடக்கத்தில் தமிழ் எண்கள் இடம் சார்ந்த முறையில் (Positional System) எழுதப் பயன்படுத்தப்படவில்லை. 10, 100, 1000 ஆகியவற்றுக்குத் தனித்தனி குறியீடுகள் இருப்பதைக்கொண்டு இதை அறியலாம். பூச்சியம்/சுழியம் (0) அறிமுகம் செய்யப்பட்ட பின்னர்தான் தமிழ் எண்கள் இடம் சார்ந்த முறையில் (அதாவது பத்தாம் இடம், நூறாம் இடம்...) எழுத ஆரம்பிக்கப்பட்டது.**

## தமிழில் பூச்சியம்

கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலேயே பாபிலோனில் சூனியத்திற்காக ஒரு தனிக்குறியீட்டைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் அதன் மதிப்பைப் பொறுத்து அதைப் பயன்படுத்தவில்லை. எண்களை எழுதுவதில் ஒரு இடத்தை நிரப்புவதற்காக மட்டும் அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதுபற்றி பகுதி I இல் பார்த்தோம்.

கி.பி. முதல் நூற்றாண்டில் (தென்னமெரிக்க) மாயா நாகரிகம் ஒரு "சூனிய" த்தைப் (சிப்பி போன்ற வடிவத்தை) பயன்படுத்தியிருக்கிறது. ஆனால் அதை ஒரு இடமதிப்புத்திட்டத்தின் அங்கமாக அவர்கள் கொள்ளவில்லை. கிரேக்கர்கள் எண்களுக்குப் பதிலாக எழுத்துக்களைப் பயன்படுத்தித் தங்களையே கட்டிப் போட்டுக் கொண்டு விட்டார்கள்.

அதனால் கணிப்பு என்ற செயற்பாடு மிகவும் தனிப்பட்டதாகவும் தொழில்நுட்பம் தேவைப்பட்டதாகவும் இருந்தது. எடுத்துக் காட்டாக, அவர்களுடைய உலகத்தில் 27, 207, 270, 2007 முதலிய எண்கள் எல்லாம் 2, 7 என்ற இரண்டே குறிகளைக் கொண்டு, இடையில் ஒரு இடைவெளி கொடுத்து எழுதப்பட்டன. அதனால் இந்த எண்களுக்குள் ஒரு வித்தியாசமில்லாமல் இருந்தது.

ரோமானிய உலகத்திலும் சூனியத்திற்கு ஒரு தனி குறியீடு இல்லாமல் இருந்தது. எடுத்துக் காட்டாக, 101,000 என்று குறிப்பிட வேண்டுமானால், 101 முறை M என்ற எழுத்தை எழுத வேண்டும்.

எகிப்தின் முறைகளிலோ சூனியமும் கிடையாது எல்லா எண்களையும் பத்து இலக்கங்களால் எழுதலாம் என்ற கருத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

சுழியம் என்பதை வெறும் குறியீடாகக் கருதாமல், எண்ணாக முதலில் பாவித்தவர்கள் இந்தியர்கள். சுழியம் தமிழில் இருந்தே தோற்றம் பெற்றது எனக்கருதுவோரும் உளர். 2011 ஜனவரி, 18 ஆம் திகதி ஆசியவியல் நிறுவனத்தின் (Institute of Asian Studies) வெள்ளி விழாக்கருத்தரங்கில், பேராசிரியர் முனைவர் கு.அரசேந்திரன் இதனைத் தனது ஆராய்ச்சியின் முடிவாக முன்வைத்தார். (தகவல் கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியா)

**சுழியம்/பூச்சியம் என்பதை வெறும் குறியீடாகக் கருதாமல், எண்ணாக முதலில் பாவித்தவர்கள் இந்தியர்கள். சுழியம் தமிழில் இருந்தே தோற்றம் பெற்றது எனக்கருதுவோரும் உளர். 2011 ஜனவரி, 18 ஆம் திகதி ஆசியவ ியல் நிறுவனத்தின் வெள்ளிவிழாக் கருத்தரங்கில், பேராசிரி யர் முனைவர் கு.அரசேந்திரன் இதனைத் தனது ஆராய்ச்சியின் முடிவாக முன்வைத்தார்.**

எண்களைத் தமிழ் முறைப்படி எழுதும் முறையில் பழங்காலத்தில் பூச்சியம் பயன்படுத்தும் வழக்கம் இல்லாமல் இருந்தது. ஆனால் தற்காலத்தில் தமிழில் எண்களை எழுதும் போது பூச்சியம் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. 1825 ஆம் ஆண்டு வெளிவந்த "கணித தீபிகை" என்னும் கணித நூலில் கணித செயற்பாடுகளை எளிமையாக்கும் பொருட்டு தமிழில் பூச்சியம் பயன்படுத்தப்பட்டதாகவும் அன்றிலிருந்து பூச்சியம் பயன்படுத்தும் முறை நடைமுறையில் வந்ததாகவும் தகவல்கள் சொல்லுகின்றன. ஆகவே தற்போது 'க' முதல் ௯ வரையான இலக்கங்களும் (1 முதல் 9) பூச்சியமுமே போதுமானதாக உள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித பூமியாக...

வலியுறுத்தியுள்ளார்.

இம்முறை அரச வெசாக் விழா 2022 இனை பலங்கொட கூரகல வரலாற்று சிறப்புமிக்க தலத்தை மையமாகக் கொண்டு நடத்துவதற்கு தீர்மானித்து நேற்று முன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு அரச வெசாக் விழாவினை வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரையில் நடத்துவதற்கு நாம் தீர்மானித்திருந்தோம்.

ஆனால் கோவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார பிரிவின் ஆலோசனைக்கேற்ப பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பை கருத்திற் கொண்டு அரச வெசாக் விழாவினை நடத்த முடியாது போனது.

இம்முறை அரச வெசாக் விழாவிற்கு முன்னதாக நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரத்தை வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை காலம் தாமதிக்காது முன்னெடுக்குமாறு பிரதமர் அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் குறிப்பிட்டார். (ம)

## பெப்ரவரி...

கணிக்க முடியாது என விசேட வைத்திய நிபுணர் வைத்திய ஜூட் ஜயமஹ தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஜூட் ஜயமஹ இதனைத் தெரிவித்தார்.

"நாளுக்கு நாள், வாரா வாரம், மாதா மாதம் நிலைமைகளை ஆய்வு செய்து, அடுத்தகட்ட முடிவுகளை எடுக்கிறோம். நாட்கள், மாதங்கள் வேகமாக நகர்கின்றன. அதனால் அடுத்த வாரம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வாரமாகும். பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பமாகின்றன."

"ஏப்ரலில் மீண்டும் ஒரு பண்டிகை காலம் வருகிறது, எனவே நாம் தற்போதே அது குறித்து கவனம் செலுத்தி சுகாதார பழக்கங்களுடன் செயற்படுதல் கட்டாயமாகும்.

"பெப்ரவரி 1 ஆம் திகதி நாட்டை மூடுவது குறித்து எமக்கு இப்போது கணிக்க முடியாது என்றார்." (ம)

## கொரோனா...

இதன் காரணமாக மீண்டும் கொரோனா அலை ஏற்படக்கூடும் என்ற ஐயம் நிலவுகிறது.

நாட்டின் பல பகுதிகளில் ஒமைக்ரொன் திரிபுடனான கொரொனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒமைக்ரொன் திரிபானது மிக இலகுவாக பரவக்கூடியது. அறிகுறிகள் குறைந்துள்ள போதிலும், பெரும்பாலானோருக்கு அந்த திரிபு தொற்றக்கூடும் என தேசிய தொற்றுநோய் விஞ்ஞான நிறுவகத்தின் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். (ம)

## புலம்பெயர்...

தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் பதிவின் பின்னர் இன்று (நேற்று) முதலாவது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மக்கள் பொருளாதாரரீதியாகப் பலம் இழந்து காணப்படுகின்றார்கள். இந்த நிலையில் நாங்கள் எந்த அளவுக்கு கட்சி என்ற ரீதியில் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாக பேசியுள்ளோம். அந்த வகையில் வீட்டுத்தோட்டம், காளான் வளர்ப்பு பற்றி ஆராய்ந்தோம். எங்களால் முடிந்தளவுக்கு புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து மக்களுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய முடியும் என்று பேசியுள்ளோம்.

இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதேவேளை தலைவர்கள் மூத்தவர்களின் அனுபவங்களும் அறிவும் அரசியல் ஞானமும் இளைஞர்களின் வீரியமும் சேர்ந்து எமது கட்சியைக் கொண்டு நடத்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்றார். (ம-33)

## அரசின்...

அரசாங்கத்தின் பங்காளி கட்சிகள் என்றவகையில் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது எம்முடன் எந்த கலந்துரையாடலையும் மேற்கொள்வதில்லை என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் சோசலிச மக்கள் முன்னணியின் புதிய செயலாளர் நாயகமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்அங்குதொடர்ந்து தெரிவிக்கையில்,

நாடுபாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்துவருகின்றது. அத்தியாவசிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் உணவு பிரச்சினைக்கும் முகம் கொடுக்க நேரிடும் அபாயம் இருக்கின்றது.

இந்த நிலை ஏற்படுவதற்கு கோவிட் தொற்று பிரதான காரணமாக இருந்தாலும் அரசாங்கம் மேற்கொண்ட திடீர் தீர்மானங்களும் இதற்கு பாரியளவில் தாக்கம் செலுத்தி இருக்கின்றது என்றார். (ம)


மெகா பவர்
திகதி 13/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0994
Y 03 01 21 31 52

செவன
திகதி 13/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 343
L 13 44 68 86

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2022/01/13
சீட்டிழுப்பு இலக்கம் 1666
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 19 47 48 51

மஹஜன சம்பத
திகதி 2022/01/13
சீட்டிழுப்பு இலக்கம் 4646
S 4 2 8 5 0 9

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 13.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2941
B 05 10 63 64

தன நிதானய
திகதி - 2022.01.13
சீட்டிழுப்பு இலக்கம் - 676
D 29 30 42 81

அத கோடிபதி
தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1449
சீட்டிழுப்பு திகதி: 13.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,734,000
வெற்றி இலக்கங்கள் 01 36 44 75 C

சனிதா
தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3784
சீட்டிழுப்பு திகதி: 13.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,868,660
வெற்றி இலக்கங்கள் 03062964 E

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 22 06 42 68 76
சீட்டிழுப்பு வாரம் 799
வர்ணம் செம்மஞ்சள்
2022.01.13 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 203,802,787/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1623
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 13.01.2022
தினம் வியாழன்
M 01 06 08 19
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 54,364,752/=

சங்வர்தன வாசனாவ
திகதி : 2022-01-13
வெற்றி வாரம் : 476 | வர்ணம் : நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 12,526,644/-
M 10 19 13 1
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,303,680/-
ரூ. 12,639,524/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,634,181/=
திகதி 13.01.2022
வெற்றி வாரம் 3335
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 09 11 50 53 மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,625,200/=

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மணிவிழா வாழ்த்துக்கள்
திரு. நல்லதம்பி சிவநேசர்
(அதிபர்)





அளப்பரிய கல்விச் சேவையாற்றி 13.01.2022 அன்று அகவை அறுபதில் ஓய்வுபெறும் இவரை உறவினர் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

02.01.1984 - 20.08.1989 - ஆசிரியர்
குளி/ தீவுறும்பொல காசீம் வித்தியாலயம்
21.08.1989 - 11.10.1989 - ஆசிரியர்
கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்
12.10.1989 - 21.10.1997 - ஆசிரியர்
கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்
22.10.1997 - 31.07.1998 - ஆசிரியர்
கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்
01.08.1998 - 30.11.2005 - ஆசிரிய ஆலோசகர்
(சமூக கல்வி) வலய கல்வி அலுவலகம், கிளிநொச்சி
01.12.2005 - 12.01.2014 - அதிபர்
கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம்
13.01.2014 - 05.10.2017 - பிரதி அதிபர்
கிளி/ கனகாம்பிகைகுளம் அ.த.க. பாடசாலை
06.10.2017 - 13.01.2022 - அதிபர்
கிளி/ கனகாம்பிகைகுளம் அ.த.க. பாடசாலை

வாழ்த்துவோர்:
தேவராசா குடும்பம்
(மைத்துனன்)
பிரமந்தனாறு
(9653)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி தேவை

ஒருங்கிணைந்த பண்ணை செய்வதற்கு 10 ஏக்கருக்கு மேல் தோட்டக்காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. தேவையான இடங்கள் கிளிநொச்சியில்..

- கிருஸ்ணபுரம்
- செல்வாநகர்
- மல்லாவி
- மலையாளபுரம்
- வட்டக்கச்சி
- சாந்தபுரம்
- விசுவமடு

குறிப்பாக குளங்களை அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது. (தரகர் தேவையில்லை) (9614)

**077 052 3594**

## கணக்காளர் தேவை

பண்ணை, தங்கும் விடுதி, உணவகம் என்பனவற்றிற்கு கணக்குகள் பார்க்கக் கூடியவர்கள். அனுபவத்திற்கு முன்னுரிமை. இடம் : சண்டிலிப்பாய் (C-3533)

**077 078 0240**
**071 078 0240**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## KBK Accounting College

கந்தர்மடம் | கொழும்புத்துறை

A/L கணக்கீடு | Gr.10, 11 வணிகமும் கணக்கீடும்

திரு. க. பா. பாலகஜன் M.Com (9438)

**077 216 8884**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3491)

**0768226240** DHL

## வேலை வாய்ப்பு

எமது பண்ணைகள் புதிதாக பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

விண்ணப்பிக்கக் கூடியவர்கள்:

- O/L வரை படித்தவர்கள்.
- அரச வேலையில் ஓய்வுபெற்ற அதிகாரிகள், ஆசிரியர்கள்.
- விவசாய, கால்நடை ஆர்வம். அனுபவம் மிக அவசியம்.

சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9629)

**077 814 7389 | 077 614 7333**

## வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்

கனடா/UK/சிங்கப்பூர்/மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும் (C-3492)

ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்

IELTS | Life Skills B1

வெளிநாடு செல்பவர்களுக்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

**0777-068-777** R1

## குத்தகைக்கு அல்லது விலைக்கு வேண்டும்

நெல் வயல் காணிகள், தென்னங்காணிகள், தோட்டக்காணிகள், பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் செய்ய உகந்த காணிகள்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

தொடர்பு (9635)

**+9477 795 0439 / +94 (71) 703 0547**
**0041 79 3344733**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 39 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

[ மேட்டுநிலம், நிலப்பரப்பு ]

நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்

ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (9633)

தொடர்பு

**077 911 6983, 077 658 5999**
**077 288 0152, 077 623 4204**


## +594...

மேலும் 594 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 594,319 ஆக அதிகரித்துள் ளது. (ம)





ஜனவரி 2022

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)

10.00மு.ப - 8.00பி.ப

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை**

ORGANIZED UNDER HEALTH GUIDELINES

(C-3526)

MAIN SPONSOR: INSEE CEMENT
CO - SPONSOR: SLTMOBITEL
OFFICIAL PARTNERS: SAFETY & HYGIENE – SUN; FOOD; PRINT MEDIA; ELECTRONIC MEDIA – DAN
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY
ENDORSED SUPPORTED BY: Ministry of Industries; Jaffna Municipal Council; Consulate General of India Jaffna; EDB Regional Export Development
PARTNER COUNTRY: India

For more information:
Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1 ஆம் வீதியில் 81 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 Km தூரம் வீடமைப்பதற்கு நல்ல சூழல் (9659)

**076 890 9259**
**077 015 0353**

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உணவகம் மற்றும் தங்குமிடத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

- அலுவலக உதவியாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்
- சுத்திகரிப்பாளர்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்பு (C-3534)

**077 464 9297 | 021 222 7100**

## யப்பான் சைக்கிள்

1. லேடீஸ் சைக்கிள்கள்
2. ஜென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்



இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு.
கழுவிப் பூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.

யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
விஷேட விலைக்கழிவு உண்டு. (C-3535)

**யப்பான் சைக்கிள் B பசார்**

கந்தரோடை றோட், சுன்னாகம் (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)

078 615 5929


## 11 பேர்...

ளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இலங்கையில் இது வரை பதிவான மொத்த கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 15,174 ஆகபதிவாகியுள்ளது. (ம)

## சந்தை...

காரணம் என இலங்கை தெங்கு செய்கையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உரம் இன்மையால் தேங்காயின் விளைச்சல் குறைவடைந்துள்ளது.

இந்த நிலையில், சந்தையில் தற்போது தேங்காய் ஒன்று 80 முதல் 95 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.